

பாரதி பதிப்பகம்

ராஜி

# கனவுப் பாலம்

# கனவுப்பாலம்

சாவி

பாரதி பதிப்பகம்
108, உஸ்மான்சாலை
தியாகராய நகர்
சென்னை-17

...“ஓ, நோ! ப்ளெஷர்! ஹெல்ப் யூ! யாருக்காவது ஏதாவது உதவி செய்வதில் ஜப்பானியர்களாகிய நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். அந்த மகிழ்ச்சியை நீங்கள் எனக்குத் தந்தீர்கள்!”...

அவன் மிட்ஸுயோ ஸ்டோரில் நுழைந்தபோது அயாகோவைக் காணவில்லை. யாரோ ஒருத்தி உட்கார்ந்திருந்தாள். நடுத்தர வயது. அயாகோவைப் போலவே அழகு. அதே ஜாடை. கண்கள் சோகமாய்ச் சிரித்தன. ‘அம்மாவாயிருக்குமோ?’

கடை நிறைய புத்தர் சிலைகள், பித்தளை விளக்குகள், மர பொம்மைகள், சீன ஜாடிகள், கம்பளங்கள்......

அவன் அயாகோவைத் துழாவினான். காணவில்லை. ஏதோ வாங்க வந்தவனைப் போல் நடித்து கடைப் பொருள்களை ஒவ்வொன்றாகப் பார்த்துக்கொண்டே நேரம் போக்கினான். அங்கே வைத்திருந்த அழகான சீன ஜாடி ஒன்று அவனைக் கவர்ந்தது. கொஞ்சம் பெரிய ஜாடி. அதை எடுத்துப் பார்த்தபோது அதன் மூடி தவறிக் கீழே விழுந்து சுக்கலாயின.

“ஸாரி, ஸாரி!” என்றான்.

அந்த அம்மாள் எழுந்து ஓடி வந்தாள். ஜப்பான் மொழியில் ஏதோ சொன்னாள். திடீரென்று ஒரு கிழவி வந்து அந்தத் துண்டுகளைப்பொறுக்கி எடுத்தாள்.

“அநியாயமாய் உடைந்து போயிற்றே!” என்ற முகபாவம்.

“தவறு என்னுடையதுதான். நான் தான் உடைத்து விட்டேன். பணம் தந்து விடுகிறேன். இது என்ன விலை?” என்று கேட்டான்.

“ஆறுயிரம் யென்” என்ற சீட்டு அதன் கழுத்தில் கட்டியிருந்தது.

“பரவாயில்லை. நீ பணம் தர வேண்டாம். உன்னைப் பார்த்தால் ஒரு இந்தியன் மாதிரி தெரிகிறது” என்றாள்.

அந்தக் கிழவியும் அவளும் ஏதோ முணுமுணுத்துக் கொண்டார்கள். அனுதாபத்தோடு அவனைப் பார்த்தார்கள் "பரவாயில்லை, ஆக்ஸிடெண்ட்" என்றார்கள் மறுபடியும்.

இளைஞன் பிடிவாதமாகப் பணத்தை எடுத்துக் கொடுத்து. அந்த ஜாடியை அட்டைப் பெட்டியில் கட்டிக் கொடுக்கச் சொன்னான்.

கிழவி அந்த மூடிச் சிதறல்களை ஒன்றுவிடாமல் ஜாடிக்குள் வைத்துக் கட்டினாள். அதன் மீது பூப்போட்ட காகிதத்தால் சுற்றி, 'கம் டேப்' ஒட்டி, ஊதா ரிப்பனால் சுற்றினாள். ஏதோபரிசு கொடுப்பதுபோல் அதை அவனிடம் எடுத்துத் தந்துவிட்டு மூன்று முறை குனிந்து வணங்கினாள்.

அப்போது தான்,

வெளியே போயிருந்த அயாகோ உள்ளே நுழைந்தாள். இவனைக் கண்டு விட்டு "கோபால்! ஸாரி, ஸாரி! உங்களைக் காக்க வைத்துவிட்டேன்" என்று கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டே சொன்னாள். சின்ன ஸீக்கோ க்வார்ட்ஸ் 7-20 காட்டியது.

"இதென்ன பார்ஸல்? இங்கே ஏதாவது வாங்கினீர்களா?"

"ஆமாம்; இந்த ஜாடியின் மூடியைக் கைதவறி உடைத்து விட்டேன். உன் கடையில், ஒரு வியாபாரம் செய்த மாதிரி இருக்கட்டும் என்று இதை வாங்கினேன். இந்தா இது உனக்குத்தான். நான் தரும் பரிசு!"

"எனக்கு வேண்டாம். இதை நீங்கள் இந்தியாவுக்கு எடுத்துச் செல்லுங்கள்" என்றாள்.

"இந்தியாவுக்குக் கொண்டு போய் யாரிடம் தருவது?"

"உங்கள் மனைவியிடம்...."

"எனக்கு இன்னும் மணமாகவில்லை!"

அவள் அதை வாங்கிக் கொண்டாள்.

"கொஞ்சம் இருங்கள்; இதோ வந்து விடுகிறேன்" என்று பின் பக்கம் விரைந்தாள்.

அப்படிப் போகும்போதே "அம்மா! நேற்று பார்த்த தாகச் சொன்னேனே. அது இவர்தான்! கோபே ரயிலில் சந்தித்தேன், இந்தியாவிலிருந்து வந்திருக்கிருர். இவரோடு கொஞ்சம் வேளியே போய்விட்டு வந்து விடுகிறேன்" என்ருள்.

கோபே ரயிலில் பயணமாகிக் கொண்டிருந்த கோபால் கண்டக்டர் வந்தபோது "நான் கோபேயில் இறங்க வேண்டும். ஊருக்குப் புதியவன். தயவுசெய்து கோபே வந்ததும் எனக்குச் சொல்கிறீர்களா?" என்று கேட்டான்.

கண்டக்டருக்கு ஆங்கிலம் புரியவில்லை.

"கோபே கோபே" என்று இரண்டு முறை சொல்லி விட்டுப் போனுன். வெகு நேரம் ஆகியும் கோபே வர வில்லை. கண்டக்டரும் வரவில்லை. கோபாலுக்குச் சந்தேகம் வந்து விட்டது. கோபேயைத் தாண்டி வந்துவிட்டோமா என்று நினைத்தான். அப்புறம்தான் அந்த கண்டக்டர் வந்தான்.

"கோபே எப்போது வரும்?" என்று கேட்டான் கோபால்.

'ஓ—ஹா! கோபே?' என்று கேட்டுவிட்டு, கைகளை, விரித்து, கட்டை விரலால் கோபே திசையைக் காட்டி கோபேயைக் கடந்துவிட்ட செய்தியைச் சொன்ஞன்.

"இப்போது நான் என்ன செய்வது? அடுத்த ஸ்டே ஷனில் இறங்கி விடட்டுமா?" கோபால் பேசியது கண்டக் டருக்குப் புரியவில்லை.

இந்தச் சமயத்தில்தான் அயாகோ அவன் உதவிக்கு வந்தாள்.

"எனக்குக் கொஞ்சம் இங்கிலீஷ் தெரியும். உங்களுக்கு உதவி செய்யலாமா?" என்று கேட்டாள்.

கோபேயைக் கோட்டைவிட்ட செய்தியை அவ்ளிடம் சொன்ஞன் கோபால்.

"இரண்டு ஸ்டேஷன் தாண்டி வந்து விட்டீர்களே! கவலைப்படாதீர்கள். நான் உங்களைக் கோபேயில் கொண்டு சேர்த்து விடுகிறேன்" என்று அடுத்த ஸ்டேஷனில் இறங்கி, கோபாலை ஒரு கம்பத்தின் அருகில் நிற்கச் சொல்லி விட்டு ஓடிப்போய் இரண்டு டிக்கட்டுகள் வாங்கி வந்தாள்.

சில நிமிடங்களுக்குள் கோபே செல்லும் ரயில் எதிர்த் திசையில் வந்து நின்றது. ஏறி உட்கார்ந்து கொண்டார்கள்.

"கோபேயில் எங்கே போக வேண்டும், உங்களுக்கு?"

"ஓரியண்டல் ஹோட்டல்?"

"ஓ! அது ஸ்டேஷனுக்கு அருகிலேயே உள்ளது. கொபே ரொம்ப சிக்கலான ஊர். வழி கண்டுபிடிப்பது ரொம்பக் கஷ்டம். யாரும் இங்கிலீஷ் பேச மாட்டார்கள். நானே ஓட்டல்வரை கொண்டு விடுகிறேன்" என்றாள்.

ரயில் பயணத்தின்போது இருவரும் நிறையப் பேசினார்கள்.

"இந்தியர்கள் ரொம்ப நல்லவர்கள். சின்ன வயதில் நான் தமிழ்நாட்டுக்கு வந்திருக்கிறேன். காஞ்சீபுரம் போயிருக்கிறேன். சங்கராச்சார்யார் பார்த்திருக்கிறேன். மல்லிகைப் பூ எனக்கு ரொம்பப் பிடிக்கும். எங்களுக்கு புத்தரைத் தந்தது உங்கள் இந்திய நாடுதான்" என்றாள்.

"அதற்குப் பதிலாக நீங்கள் இந்தியாவுக்கு என்ன கொடுத்தீர்கள்?" என்று கேட்டான் கோபால்.

"கராத்தே!" என்று சொல்லிச் சிரித்தாள் அயாகோ.

கோபே வந்து விட்டது. ஓரியண்டல் ஓட்டல் வரை அவனை அழைத்துச் சென்று, ரிஸப்ஷனில் சாவி வாங்கிக் கொடுத்து, குனிந்து வணங்கிய பின்னர் விடைபெற்றுக் கொண்டாள்.

"மேலே என் அறைக்கு வந்து ஒரு டீ சாப்பிட்டு விட்டுப் போகலாமே!"

"ஸாரி. நான் ஜப்பானியப் பெண் அங்கெல்லாம் வரமாட்டேன்."

"டிக்கெட் பணம்....?" ஆயிரம் யென் நோட்டு ஒன்றை எடுத்துக் கொடுக்கப் போனான்.

"ஓ, நோ!ப்ளெஷர்! ஹெர் ப்யூ. யாருக்காவது ஏதாவது உதவி செய்வதில் ஜப்பானியர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். அந்த மகிழ்ச்சி எனக்கு உங்களால் கிட்டியது. அதற்கு விலை கிடையாது. தாங்கள் டோக்கியோ வந்தால் என்னை அவசியம் சந்திக்க வேண்டும்."

"ஓ, நாளைக்கே வந்து விடுவேன்!" என்றான்.

"இதோ விலாசம்" என்று கூறி தீப்பெட்டி ஒன்றை அவனிடம் கொடுத்தாள். 'ஸனுயிலிருந்து மேற்கே நடந்து அடுத்த முதல் சந்தில் வடக்கே திரும்பினால் எங்கள் 'மிட்ஸூயோ ஸ்டோர்' நீலமும் மஞ்சளுமாய்த் தெரியும்."

வேறு டிரஸ் செய்து கொண்டு பின் பக்கத்திலிருந்து வந்த அயாகோ "எங்கே போகலாம், கோபால்?" என்றாள்.

"எங்கு வேண்டுமானாலும்...."

தெருவில் ஒரு டாக்ஸியை நிறுத்தி ஏறிக் கொண்டார்கள்

"ஷிம்பாஷி!" என்றாள் அயாகோ.

"ஆமாம்; என்னை உன் கடைக்கு வரச் சொல்லிவிட்டு நீ எங்கே போய் விட்டாய்?"

"பிரைவேட் ஸ்கூலுக்கு. மாலை வேளைகளில் நான் இங்கிலீஷ் கற்றுக் கொள்கிறேன்."

ஷிம்பாஷியில் இறங்கி ஒரு தெருவில் நடந்தார்கள். தியேட்டர்களும் கேளிக்கை விடுதிகளும் மலிந்த வீதி.

'நிச்சிகேக்கி' தியேட்டர் வாசலில் பெரிய அளவு போஸ்டரில் டாப்லெஸ் பெண்கள் சிரித்தார்கள். வரிசையாகச் சம உயரத்தில் ஒற்றைக் காலை மடக்கி, மார்புகள் விம்ம....த்ரீ டைமன்ஷன் எஃபெக்ட்!

அவன் அதையே கண் கொட்டாமல் பார்த்தபோது அயாகோவுக்குக் கூச்சமாயிருந்தது.

"எங்கேயாவது போய்ச் சாப்பிடுவோமா?" என்று கேட்டாள்.

"உம்..." என்றான் பார்வையைத் திருப்பாமல்.

"நாயர் ரெஸ்டாரெண்டுக்குப் போவோம். எனக்கு அந்த உணவு ரொம்பப் பிடிக்கும்" என்றாள்.

"அது இந்தியர் நடத்துவதல்லவா?"

"என் தந்தை கூட இந்தியர்தான். தமிழ் நாட்டுக்காரர். இறந்து விட்டார்."

"பேர்?"

"ராஜன்."

"உனக்குத் தமிழ் வருமா?"

"வராது."

நாயர் ஓட்டலுக்குப் போனார்கள். குழம்பு சாதமும் பப்படமும் கொண்டு வரச் சொன்னார்கள். அது வருகிற வரை கோபால் கொஞ்சம் விஸ்கி சாப்பிட்டான். சூடாகக் குழம்பு சாதம் வந்தது. குடை மிளகாய், கேரட், உருளைக் கிழங்கு மூன்றும் குழம்பில் குண்டு குண்டாய் விழித்தன.

"என்னோடு தனியாக வருவதில் உனக்கு அச்சமில்லையா?"

"ஜப்பானியப் பெண்கள் தைரிய சாலிகள். தங்களைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரிந்தவர்கள்...."

"நீ இப்போது படித்துக் கொண்டிருக்கிறாயா!"

"முடித்து விட்டேன். அம்மாவுக்குத் துணையாகக் கடையில் உதவி செய்து வருகிறேன்...."

நாயர் ஓட்டலிலிருந்து வெளியேறிய இருவரும் பக்கத்து மூலையிலிருந்த காஸினோவுக்குள் நுழைந்தார்கள். அவள் ஓர் இயந்திரத்தின் முன்போய் நின்றாள். பணம் போட்டு நிறைய ஸ்டீல் குண்டுகளைப் பெற்றாள். இன்னொரு இயந்திரத்தின் முன் போய் அந்த குண்டுகளை ஒவ்வொன்றாக அதில் போட்டு 'லிவரை' இழுத்து இழுத்து நிறைய ஸ்டீல் குண்டுகளை சேர்த்தாள். அவற்றைக் கொண்டுபோய் கௌண்ட்டரில் கொடுத்து எண்ணச் சொன்னாள். "என்ன வேடுண்டும்?"

விலை உயர்ந்த டை ஒன்றை வாங்கி கோபாலிடம் கொடுத்தாள்.

"இதற்குத்தான் விளையாடினுயா? லாபம் கிடைத்ததா?"

"ஆமாம். நாலாயிரம் யென்! அதற்கு ஒரு டை வாங்கிவிட்டேன். நீங்கள் இந்த 'பச்சிங்கோ' விளையாட்டு பார்த்ததில்லையே....!"

"டை வாங்கித் தருவது உங்களூர் வழக்கமா?"

"ஆம்; ஒரு பெண் ஒருவனுக்கு டை வாங்கித் தருகிருள் என்ருல் அவனை அவளுக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது என்று அர்த்தம்!"

"அப்ப...?" மனதில் கேட்டுக் கொண்டான்.

கோபால் தன் ஓட்டலுக்குத் திரும்பிய போது மணி பதினென்று. ஜப்பானியர்கள் குளிக்கிற நேரம். களைப்போடு கட்டிலில் அமர்ந்தான். அந்த டையை எடுத்து ஆசையோடு முத்தமிட்டான்.

அயாகோவின் சிரிப்பொலி அவன் காதுகளில் ஒலித்தது. கூந்தலை ஒதுக்கி விட்டுக் கொள்ளும் நளினம் கண்களில் தெரிந்தது. ஷூ கழற்றி, ஸாக்ஸ் கழற்றி லுங்கி அணிந்து, க்ரீன் டீ தயாரித்துக் கொண்டிருந்தபோது டெலிபோன் மணி ஒலிக்கவே 'யாராயிருக்கும்?' என்ற கேள்வியுடன், ரிஸீவரை எடுத்தான். அயாகோ பேசினுள்.

"பர்ஸை எங்கள் கடையில் மறந்து விட்டுப் போய் விட்டீர்களே! இதில் உங்கள் போட்டோ இருக்கிறது; அத்துடன் கற்றை கற்றையாய் 'யென்' நோட்டுகள் இருக்கின்றன. காலையில் கொண்டு வந்து தரட்டுமா? கவலைப் படாமல் நன்ருகத் தூங்குங்கள். குட்நைட்! ஸ்வீட் ட்ரீம்ஸ்!" என்ருள். அப்படிச் சொன்ன அயாகோ மட்டும் அன்றிரவு தூங்கவில்லை. அவளுக்குத் தூக்கம் வரவில்லை.

# 2

ஏழாவது மாடி, 715-ல் டெலிபோன் மணி அடக்கமாக ஒலித்தது. டெலிவிஷனில் இருந்த எலக்ட்ரானிக் ஒளிப் பூச்சி 8-13-07 என்றது.

கோபால் அயாகோவின் குரலை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அவள் தான் பேசினாள்.

"நான் கீழே ரிஸப்ஷனில் காத்திருக்கிறேன்....!"

"ஓ, வந்து விட்டாயா! நீ மேலே வர மாட்டாய் என்று எனக்குத் தெரியும்! இதோ குளியலை முடித்துவிட்டு நானே கீழே வந்து விடுகிறேன்."

"ஹய்! இரவில் குளிப்பதில்லையா?"

"எங்கள் நாட்டில் காலையில்தான் குளிப்போம்."

"ஹய்!"

"எல்லாவற்றுக்கும் 'ஹய், ஹய்' தானா?"

"அயாகோ! நான் உன்னிடம் நிறையப் பேச வேண்டும்!"

"ஹய்! கீழே ரெஸ்ட்டாரண்ட் இருக்கிறது. அங்கேயே உட்கார்ந்து பேசுவோம்." ரிஸீவரை வைத்தாள். நோக்கமின்றி உல்லாசமாய் நடந்தாள் பரந்துவிரிந்த தாழ்வாரத்தில், பளிங்குத் தரையின் பளபளப்பில், பிரதிபிம்பமாக இன்னொரு அயாகோ நடந்தாள்.

தாழ்வாரத்தின் மறு கோடியில் நீர் வீழ்ச்சி ஒன்று தெரிந்தது. சலனமற்ற தண்ணீரில் அலையும் வண்ண மீன்கள். அந்த மீன்களின் சலனத்தில் அயாகோ லயித்திருந்த போது தன் தோள் பட்டையை யாரோ தொடுவதை உணர்ந்து திரும்பிப் பார்க்க,....

கோபால்!

"வந்து விட்டீர்களா?"

ரெஸ்ட்டாரண்ட் போனார்கள். ஒரு மூலையில் இரண்டே நாற்காலிகளுடன் இருந்த 'டேபிள்' பிடித்து உட்கார்ந்தார்கள். கண்ணாடிக்கு வெளியே குள்ளமான குரோட்டன் புதர்கள்! செர்ரி மரங்கள்! அவற்றில் குலுங்கும் மலர்க் கொத்துகள்!

"இயற்கை அழகெல்லாம் ஒன்று கூடி ஒரு நாடாக உருவான மாதிரி இருக்கிறது இந்த ஜப்பான்!"

"இங்கே நாங்கள் ஒரு சிறு செடிக்குக் கூட தீங்கு செய்ய மாட்டோம்!"

"இங்கே உணவோடு ஏதோ தழைகளை ஒடித்துப் போட்டுத் தருகிறீர்களே, அது தீங்கில்லையா?"

"உங்கள் ஊர் கறிவேப்பிலை!"

"தமிழ்நாட்டைப் பற்றி ரொம்பத் தெரிகிறது உனக்கு!"

"என்ன சாப்பிடுகிறீர்கள்?"

"டெம்பூரா!"

"இன்று என்ன திட்டம்? எங்கே போகப் போகிறீர்கள்?" அயாகோ கேட்டாள்.

"டயட் பில்டிங்..."

"அங்கே யாரைப் பார்க்கவேண்டும்?"

"மினிஸ்ட்ரி ஆப் இண்டர்நேஷனல் ட்ரேட் அண்ட் இண்டஸ்ட்ரியில் யோஷிகாவா என்பவரைப் பார்க்க வேண்டும். அவர் ஒரு பெரிய அதிகாரி. அதற்கு முன்னால்—கிஜிமா என்பவரைப் பார்த்துப் பேசவேண்டும்...."

"கிஜிமாவா? யார் அது?"

"ஸகூரா இயக்கத்தின் தலைவியாமே, உனக்குத் தெரியுமா, அவரை?"

"நீங்கள் ஏன் அவரைப் பார்க்க வேண்டும்? அதை எனக்குச் சொல்லுங்கள்!"

"அமெரிக்காவிலுள்ள 'டிப்கோ' நிறுவனத்தைச் சேர்ந்தவன் நான். அது டெக்ஸாஸிலுள்ள மிகப் பெரிய

ஆயில் கம்பெனிகளில் ஒன்று. ஜப்பானைச் சேர்ந்த 'ஒகி' என்ற தீவில் ஏராளமான எண்ணெய் இருப்பதை எங்கள் கம்பெனி கண்டு பிடித்திருக்கிறது. இந்தப் பூர்வாங்கப் பணிகளில் கோடிக் கணக்கான டாலர்களைக் கொட்டியிருக்கிறது. இப்போது பல கம்பெனிகள் இங்கே எங்களோடு போட்டி போடுகின்றன. ஜப்பான் அரசுடன் பேசி கன்ஸெஷன் வாங்கப் பார்க்கின்றன."

"டிப்கோவில் நீங்கள் யார்?"

"ஒரு நம்பிக்கையான செக்ரடரி."

"ஜப்பான் கவர்ன்மெண்ட்டுடன் பேசினீர்களா? என்ன சொன்னார்கள்?"

"எல்லா முக்கிய ஆசாமிகளையும் பார்த்துப் பேசிவிட்டேன். முதலில் என்னென்னவோ காரணங்கள் சொல்லி, தட்டிக் கழித்துக் கொண்டிருந்தார்கள். நான் சளைக்கவில்லை. அவர்களுக்குச் சாதகமான பாயிண்ட்டுகளை எடுத்துச் சொல்லி விவாதித்தேன். இப்போது ஒரு புதிய பிரச்னையைக் கிளப்பி சில நிபந்தனைகளுடன் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அது ஒரு பெரிய கதை."

விஸ்கி குடித்தான்.

"எங்கள் ஸண்ட்டோரி விஸ்கி எப்படி இருக்கிறது?"

"என் ஸ்டோரியை முதலில் கேள்."

"சொல்லுங்கள்!"

"ஆயில் எடுக்க அனுமதித்தால் அந்தத் தீவின் அழகு. காற்று, தண்ணீர் சூழ்நிலை எல்லாமே கெட்டுப் போகுமாம். ஜப்பானில் உள்ள 'ஸகூரா' என்ற இயக்கம் இதைச் சும்மா விடாதாம். ஆமாம்; அதென்ன ஸகூரா? உனக்குத் தெரியுமா?"

"ஜப்பான் நாட்டுக்கே பெருமை தருவது இந்த 'ஸ்கூரா'தான். 'செர்ரிப்ளாஸம்' என்ற அழகான பெயரைத் தான் ஜப்பான் மொழியில் ஸகூரா என்கிறோம். ஜப்பானின்

அழகுச் சின்னமே இந்த செர்ரிப் பூக்கள் தானே! ஆகவே அந்தப் பெயராலேயே இந்த இயக்கத்தை நடத்துகிருர்கள்.''

''அவ்வளவு சக்தி வாய்ந்த இயக்கமா அது?''

''உயிரைக் கொடுத்தாவது தங்கள் லட்சியத்தைக் காப்பாற்றக் கூடிய உயர்ந்த மனிதர்கள் அந்த இயக்கத்தின் பின்னணியில் இருக்கிருர்கள்.''

''கிஜிமா யார்?''

''அந்த இயக்கத்தின் தலைவி. ரொம்ப நல்லவள். தன் வாழ்நாளையே 'ஸகூரா' வுக்காக அர்ப்பணித்துக் கொண்டவள்.''

''நான் இன்று கிஜிமாவைப் பார்த்தப் பேசியாக வேண்டும். அவருக்கு இங்கிலீஷ் தெரியுமா?''

''இங்கிலீஷ், தமிழ் இரண்டுமே தெரியும்.''

பழம் நழுவிப் பாலில் விழுந்த மாதிரி இருந்தது அவனுக்கு.

''என்ன சொல்கிருய்?' தமிழ் தெரியுமா!''

விஸ்கியை இரண்டு விழுங்கில் முடித்தான் கோபால்.

''ஆம்! என்னுடைய அம்மாதான் கிஜிமா. நேற்று கடையில் பார்த்தீர்களே, அவரேதான்!''

''நீ இதை ஏன் முன்பே என்னிடம் சொல்லவில்லை? அவரா கடையில் உட்கார்ந்து வியாபாரம் செய்கிருர்? அவ்வளவு பெரிய இயக்கத்தின் தலைவியா? நம்ப முடிய வில்லையே!''

''அவருக்கு வியாபாரம் பொழுது போக்குதான். லட்சியம் செர்ரி ப்ளாஸம். கலைப் பொருள்களில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். அதனால்தான் ஹாண்டி க்ராப்ட்ஸ் கடை வைத்திருக்கிருர். கோபால்! நீங்கள் அவரை எப்போது பார்க்க விரும்புகிறீர்கள்?''

''இன்றே, இப்போதே!''

''நான் புறப்படுகிறேன். இதோ உங்கள் சந்திப்புக்கு நேரம் தெரிவிக்கிறேன்.''

"டெலிபோன் அருகிலேயே உட்கார்ந்திருப்பேன்."

அவள் சென்ற அடுத்த அரைமணி நேரத்தில் டெலிபோன் ஒலித்தது.

"கோபால்! குட்நியூஸ்! நீங்கள் பதினொரு மணிக்கு மிட்ஸூயோ ஸ்டோருக்கு வருகிறீர்கள். கிஜிமா உங்களுக்காகக் காத்திருக்கிறார்."

"அப்படியா? நிச்சயம் வந்து விடுகிறேன்."

குறித்த நேரத்தில் கோபால் போய் நின்றான்.

"வாங்க" என்று இடுப்பளவு கிஜிமாவும் அயாகோவும் கவிழ்ந்து வரவேற்றனர்.

"அயாகோ என்னிடம் எல்லா விவரங்களும் சொல்லி விட்டாள். முதலில் 'ஓகி' தீவுக்குச் சென்று பார்த்துவிட்டு அப்புறம் பேசுவோம். புறப்படலாமா? அயாகோ! நீ கடையைப் பார்த்துக்கொள்" என்று புறப்பட்டாள் கிஜிமா.

அயாகோ அவனைக் கடைக் கண்ணால் பார்த்துச் சிரித்தாள்.

"முதலில் யோனகோ துறைமுகப் பட்டணத்துக்குப் போகிறோம். அங்கிருந்து படகில் மூன்று மணி நேரம் பயணம் செய்யப் போகிறோம். மலைகளும், பள்ளத்தாக்குகளும், சாலைகளும், சோலைகளும், திராட்சைத் தோட்டங்களும், நீர் நிலைகளும், மலர்களும், பட்சிகளும் வழிநெடுகப் பார்த்துக் கொண்டே போகலாம்!" என்றாள்.

"ரொம்ப நல்லதாய்ப் போச்சு! அந்தக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டே உங்களோடு நிறையப் பேசலாம்," என்றான்.

ஒரு டாக்ஸி பிடித்து ஏறிக் கொண்டார்கள். "அப்படி என்ன பேசப் போகிறீர்கள் கோபால்?"

"எங்கள் டிப்கோவின் திட்டம் பற்றி விரிவாக விளக்கப் போகிறேன். உங்கள் நாட்டுக்கு அதனால் கிடைக்கக்கூடிய நன்மைகளைச் சொல்லப் போகிறேன்."

கிஜிமா சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறீர்கள்?"

"நன்மையா? எங்களுக்கா? நன்மையைக் காட்டிலும் தீமைதான் அதிகம். எங்கள் செர்ரி ப்ளாஸத்தின் நோக்கம் மனிதாபிமானத்தின் மீது எழுந்தது. உங்கள் கம்பெனியின் நோக்கம் பொருளாதார ரீதியானது. இதில் யாருக்கு நன்மை!"

"இன்று உலகத்தையே ஆட்டிப் படைப்பது ஆயில்! அந்த ஆயில் உங்கள் நாட்டிலேயே கிடைக்கிறது என்றால் அது உங்களுக்குத்தானே நன்மை."

"டோக்கியோவின் சுகாதாரத்தைக் கெடுத்தது போதாதா? ஒரு லட்சம் புகை போக்கிகளால் அந்த நகரமே நாசமாகி விட்டது."

"டோக்கியோ நன்றாகத்தானே இருக்கிறது? நீங்கள் சொல்வதுபோல் இல்லையே!"

"இப்போது இல்லை என்றால் அதற்கு எங்கள் இயக்கம் தான் காரணம். பத்து வருடங்களுக்கு முன் டோக்கியோவில் பரவிய விஷ வாயு பல்லாயிரக் கணக்கான பேரை பலி வாங்கி விட்டது.

அரண்மனையைச் சுற்றி நின்ற பைன் மரங்களும், செர்ரி மரங்களும் அழிந்து போயின. கெய்ஷாக்களின் மதிப்பு மிக்க கிமோனோ உடைகளின் பளபளப்பு மங்கிப் போயின. ஒரு காலத்தில் வாஷிங்டன் நகருக்கு செர்ரி மரங்களை அன்பளிப்பாய்த் தந்த ஜப்பான் பின்னொரு சமயம் அவர்களிடமே அந்தச் செடிகளைக் கேட்டு வாங்க வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டோம். இந்த நாட்டின் காற்று, தண்ணீர், சூழ்நிலை இவற்றின் தூய்மைதான் எங்களுக்கு முக்கியம்."

படகு ஏறி அந்தத் தீவை அடையும் போது மணி ஐந்தாகிவிட்டது.

"பார்த்தீர்களா? எவ்வளவு அழகான தீவு இது? இன்னும் கொஞ்ச நேரத்தில் இங்கே சூரியன் அஸ்தமிக்கும் ஜாலத்தைக் காணப் போகிறீர்கள்."

அழகும் அமைதியும் சூழ்ந்த அந்தத் தீவில் தொழிற்சாலைகள் இல்லை. புகை போக்கிகள் இல்லை. பைன் மரங்களும், செர்ரி மரங்களும் காற்றும் நீரும் கெட்டுப் போகவில்லை.

கடற்கரை ஓரங்களில் நீலமும் சிகப்பு மாய்க கூரை வீடுகள். உல்லாசப் பயணிகளுக்கென இரண்டொரு ஓட்டல்கள். நகர்ப்புரத்து அட்டகாசங்கள் எதுவு மில்லாத எழிலார்ந்த தீவு.

கோபால் அந்தத் தீவின் எதிர் காலத்தை ஒரு நிமிடம் கனவாக எண்ணிப் பார்த்தான்.

டிப்கோ நிறுவனம் அங்கே இயந்திரக்கால் ஊன்றுகிறது. ஜீப்புகள், டிரக்குகள், டிராக்டர்கள் பெரிய பெரிய ராட்சதக் குழாய்கள், புகை போக்கிகள் அத்தனையும் பலத்த மூச்சுகள் விடுகின்றன. டிப்கோ நிறுவனத்துக்குச் சொந்தமாக ஒரு கட்டிடம் எழுகிறது. அதன் பதினாறாவது மாடிக்கு கோபால் லிப்டில் உயர்கிறான்; அங்கே போய் உயர்ந்த பதவியில் அமர்கிறான். அந்த உயரத்திலிருந்து கடற்கரை ஓரங்களில் ஆயிலுக்காகத் தவம் கிடக்கும் பெரிய பெரிய கப்பல்கள் வரிசையாக நிற்பதைப் பார்க்கிறான்.

'கிஜிமா இந்தக் கனவை நினைவாக்கு வாளா?'

இருவரும் நடந்து கடற்கரைக்குச் சென்றார்கள்.

திடீரென்று பழுக்கக் காய்ச்சிய இரும்புச் சிவப்பாய் ஒரு பெரிய வட்டப் பந்து கவிழ்ந்து சென்று கடலை முத்தமிடத் தொடங்கியது. கடல் முழுவதும், நீர்ப்பரப்பு முழுதும், அஸ்தமன சூரியனின் பொன்னிற ஜாலம்!

"கோபால்! இந்த அழகைப் பார்த்தீர்களா? இதையா கெடுக்கப் பார்க்கிறீர்கள்? அது ஒரு நாளும் நடக்காது. என் உயிர் உள்ளவரை இந்தத் தீவுக்குள் எந்தத் தொழிற்சாலையையும் நான் அனுமதிக்க மாட்டேன்" என்று சற்று ஆவேசமாகவே பேசி விட்டாள் கிஜிமா.

இவளைத் தன் வழிக்குக் கொண்டு வருவது இந்த ஜன்மத்தில் நடக்கிற காரியமல்ல என்ற முடிவுக்கு வந்தான் கோபால். காலையில் அயாகோவைச் சந்தித்த போது இருந்த நம்பிக்கையும் உற்சாகமும் இப்போது தான் பார்த்த அஸ்தமனக் காட்சி போல் அடங்கி விட்டது.

"அப்புறம்....?" கோபால் பேச்சில் சுரத்து இல்லை.

"வாருங்கள்; இன்றிரவு அதோ தெரிகிறதே, அந்த ஓட்டலில் தங்கி, காலையில் சூரியோதயம் பார்த்து விட்டு டோக்கியோ திரும்பலாம். இது உதயசூரியன் நாடு!" என்றாள் கிஜிமா.

இருவரும் அந்தப் பெரிய ஓட்டலை நோக்கி மெதுவாக நடந்தார்கள். அங்கே அயல்நாட்டுப் பயணிகள் கூட்டம் 'ரிஸப்ஷன் டெஸ்க்'கை மொய்த்துக் கொண்டிருந்தது.

ஓட்டல் வாசலில் ஏராளமான கார்கள்.

"இதற்கு முன் இங்கே இவ்வளவு கூட்டத்தை நான் பார்த்ததில்லை" என்றாள் கிஜிமா.

கோபால் மூன்றாவது மாடியில் அறை எடுத்துக் கொண்டான். கிஜிமாவுக்கு ஐந்தாவது மாடியில் இடம் கிடைத்தது.

"விடியற் காலையில்.

அந்த ஓட்டலின் பின்புறத் தோட்டத்தில் திடீரென ஒரு பரபரப்பு! திகில் நிறைந்த கூக்குரல்கள்! கிஜிமா மாடியிலிருந்து கீழே விழுந்து செத்துக் கிடந்தாள். தலைக்கருகே ரத்தம் உறைந்து கிடந்தது. அடுத்த சில நிமிடங்களில் அவளைச் சுற்றிலும் ஒரு சிறுகூட்டம். மூன்றாவது மாடியில் தங்கியிருந்த கோபாலைக் காணவில்லை. போலீஸார் அவனைத் தேடிச் சென்ற போது அந்த அறை திறந்து கிடந்தது.

...அம்மாவும் கோபாலும் இன்று பகலுக்குள் வந்து விடுவார்கள். இத்தனை நேரம் தீவை விட்டுப் புறப்பட்டிருப்பார்கள். கோபால் வந்ததும் அவரை மௌண்ட் ஃப்யூஜிக்கு

அழைத்துச் செல்ல வேண்டும். வானம் நிர்மலமாயிருக்கிறது. ஃப்யூஜியை இன்று மிகத் தெளிவாய்ப் பார்க்க முடியும். போகிற வழியில் திராட்சைத் தோட்டங்களைக் காட்டலாம். படகில் பயணம் செய்யலாம். நீர்த்தேக்கங்களின் குறுக்கே பாதையாக அமைந்துள்ள பெரிய பெரிய கூழாங்கற்கள் மீது ஒற்றைக்கால் ஊன்றி நடக்கலாம். அந்தக் கற்களின் மீது கோபாலைக் கை பிடித்து, மெய்சிலிர்க்க அழைத்துச் செல்லலாம். அங்கே அலையும் சிவப்பு மீன்களைப் பார்த்து ரசிக்கலாம்,

யமூரிலாந்துக்குப் போய் அந்தரத்தில் மலைப்பாம்பாய், அசுரத்தனமாய் வளைந்து பாயும் 'பைத்தா'னில் சவாரி செய்ய வேண்டும். அந்த பைத்தான் புயல் வேகத்தில் தலைகுப்புறக் கவிழ்ந்து மின்னலாய்ச் சுற்றிச் சுழலும்போது பயந்து நடுங்கிக் கூச்சல் போடும் கும்பலோடு சேர்ந்து கத்த வேண்டும். அதில் ஒரு இன்பம் இருக்கிறது. வீதிகளில், கடைத் தெருக்களில் கோபாலோடு சேர்ந்து நடக்க வேண்டும். திடீரென்று மழை பிடித்துக்கொள்ளும் போது குடையை விரித்துப் பிடிப்பேன். அவர் தூறலுக்கு அஞ்சி என்னோடு குடையின் கீழ் ஒண்டிக் கொள்வார். என்னை அணைத்துக் கொள்வார்.... அந்த சுகத்தில் லயிக்க வேண்டும்....

போலீஸார் கோபாலைத் தேடிச் சென்ற போது அந்த அறைக் கதவு திறந்து கிடந்தது. யார் திறந்திருப்பார்கள்!

அறை முழுதும், டாய்லெட் உள்படத் துருவினார்கள். வெளிர் நீலமாக ஒரு கைக்குட்டை கட்டிலின் மீது கிடந்தது. அதில் 'எஸ். கே.' என்ற ஆங்கில எழுத்துக்கள் வெள்ளை நூலில் உறுத்தின. அதை எடுத்துக் கொண்டார்கள். ரிஸப்ஷன்டெஸ்க்கில் குள்ளமாக தங்கப் பல்லில் சிரித்து நின்றவனைப் பார்த்துக் கேட்டார்கள்.

"கிஜிமா ஸான் இறந்த செய்தி உங்களுக்கு எப்போது தெரிந்தது?"

"கோபால் வெளியே போன சற்று நேரத்துக்கெல்லாம்."

"யார் சொன்னார்கள்?"

"பின்னால் தோட்டம் பெருக்கிக்கொண்டிருந்த கிழவி?"

"கோபால் எப்போது வெளியே போனான்?"

"விடியற்காலை ஐந்து மணி இருக்கலாம். அவசரமாக அறைச் சாவியைக் கொடுத்து விட்டு எதிரிலுள்ள ஆஸ்பத்திரிக்குப் போவதாகச் சொன்னார். முகத்தில் பீதி தெரிந்தது."

"அப்போது அவர் கையில் என்ன வைத்திருந்தார்?"

"ஒரு ப்ரீஃப் கேஸ்."

"அப்புறம்?"

"நிக்கான் காமிரா."

போலீஸார் ஐந்தாவது மாடிக்குச் சென்றனர். கிஜிமா தங்கியிருந்த அறையைச் சோதித்தபோது அவள் கைப்பை கிடந்தது. ஒரே ஒரு ஜன்னல் கதவு மட்டும் திறந்திருந்தது. அதன் வழியாகச் சில்லென்ற காற்று வேகமாக வீசியது. அவர்கள் கீழே பார்த்தபோது கிஜிமா தவளைபோல் விழுந்து கிடப்பது தெரிந்தது.

கீழே போய், கிஜிமாவை அவள் விழுந்து கிடக்கும் நிலையிலேயே ஒரு போட்டோ எடுத்துக் கொண்டார்கள். அவளைப் புரட்டியபோது, அவள் வலது கையில் கைக்குட்டை இருப்பதைக் கண்ட ஒருவன் 'ஹய்!' என்றான். அதிலும் "எஸ். கே." இருந்தன. போலீசுக்கு அந்த இரண்டு கைக்குட்டைகளும் சிறிது உற்சாகமளித்தன.

"இதோ பார்த்தீர்களா? இங்கே ஒரு பெரிய பாம்புத் தோல் கிடக்கிறது. ஒரு வேளை கிஜிமா ஜன்னல் வழியாக அதைப் பார்த்து பயந்து போய்க் கீழே விழுந்திருக்கலாம்!" என்றார் ஒரு போலீஸ் அதிகாரி.

'கீழே விழக்கூடிய அளவுக்கு இதில் பயப்பட ஒன்று மில்லை' என்று எண்ணிக் கொண்டார் இன்னொரு அதிகாரி.

கிஜிமா அறையிலிருந்து கீழே விழுந்திருந்தால், அல்லது தள்ளப்பட்டிருந்தால், அவள் அந்த அறையிலிருந்துதான் விழுந்திருக்கிருளா என்பதை நிச்சயப் படுத்திக் கொள்ள விழுந்த கோணம் சரியாயிருக்கிறதா என்று பார்த்துவிட்டுப் பிறகு கிஜிமாவைச் சுற்றிலும் கோடு போட்டார்கள்.

அவளுடைய கைப்பையைச் சோதித்து கிஜிமாவின் போட்டோ, வயது, மிட்ஸுஒயோ ஸ்டோர் விலாசம், டெலிபோன் நம்பர், அன்றைய பொருளாதாரம் அவ்வளவையும் தெரிந்து கொண்டனர்.

இதெல்லாம் முடியும்போது மணி 8-40.

இதற்குள் ஸகூரா இயக்கத் தலைவி கிஜிமாவின் அகாலமரணச் செய்தி அந்தத் தீவு முழுவதும் பரவி அதிர்ந்து அந்த அதிர்ச்சி டோக்கியோவைத் தொற்றிக் கொண்டிருந்தது.

மிட்ஸுஒயோ கடை கெடியாரத்தில் மணி 8.45. அயாகோ அப்போதுதான் கடையைத் திறந்து தூசு தட்டிக் கொண்டிருந்தாள். வாசலில் வந்து நின்ற டிரக்கிலிருந்து ஆரஞ்சு உடையில் இரண்டு பேர் இறங்கி வந்தார்கள். சிலை களும், ஜாடிகளும் மர பொம்மைகளுமாய்ச் சில 'ஹாண்டி கிராப்ட்' சமான்களை வண்டியிலிருந்து இறக்கிக் கொண்டு வந்து கடைக்குள் வைத்தார்கள். அவர்களில் ஒருவன் அந்தச் சாமான்களின் பட்டியலை அயாகோ விடம் நீட்டி கையெழுத்து வாங்கிக் கொண்டிருந்தான். அதே சமயம் இன்னொருவன் அங்கிருந்த டெலிபோனை எடுத்து, யாரிடமோ பேசிக்கொண்டே வண்டைக் காட்டிலும் சிறிதான ஒரு மைக்ரோ போன் கருவியை அதில் பதித்து விட்டுப் பரமசாதுவாக வாசலில் போய் சிகரெட் பற்ற வைத்தான்,

வந்தவர்கள் இருவரும் வண்டியில் ஏறிச் செல்ல, அயாகோ புதிதாக இறக்கப்பட்ட சாமான்களை ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்தபோது டெலிபோன் மணி அடிக்கவே, "அம்மாவா யிருக்குமோ?" என்று யோசித்த படியே ரிஸீவரை எடுத்துக் காதில் வைத்தபோது அது அம்மாவின் குரலாயில்லாமல் அம்மாவைப் பற்றிய குரலா யிருந்தது.

"போலீஸ் இன்ஸ்பெக்டர் பேசுகிறேன். அதிர்ச்சியான செய்தி ஒன்றைத் தாங்கிக்கொள்ளத் தயாராயிருங்கள். ஸகூரா இயக்கத் தலைவி கிஜிமாஸான் இன்று விடியற்காலை இங்கே இறந்து விட்டார். ஓட்டல் ஐந்தாவது மாடியிலிருந்து கீழே விழுந்து உயிர் போயிருக்கிறது. கொலையா, தற்கொலையா என்று தெரியவில்லை. அவருடன் வந்த கோபால் என்பவரைக் காணவில்லை. அவர் அறை திறந்து கிடக்கிறது. கிஜிமாஸான் அறைக் கதவும் திறந்து கிடக்கிறது. தாங்கள் கிஜிமாஸானுக்கு என்ன உறவு என்று கூற முடியுமா?"

அயாகோ, அதிர்ச்சி தாங்காமல் குலுங்கி அழுவதும் அலறுவதும் இன்ஸ்பெக்டருக்குக் கேட்கிறது. சிறிது நேரம் காத்திருந்து விட்டு "நீங்கள் அழக்கூடாது. துக்கத்தை அடக்கிக் கொண்டு சற்று அமைதியாக என் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள். தாங்கள் யார்?" என்கிறார்.

"கிஜிமாவின் மகள்."

"பெயர்?"

"அயாகோ."

"உங்கள் தாயாரின் அகால மரணம் எங்களுக்கும் இந்தத் தீவிலுள்ளோருக்கும் பெரும் அதிர்ச்சியைத் தந்துள்ளது. வெரி ஸாரி அயாகோ! இன்னும் சில மணி நேரத்துக்குள் உங்கள் தாயின் உடலை, போஸ்ட்மார்ட்டம் முடிந்ததும், உங்களிடம் கொண்டு வந்து சேர்த்து விடுவோம்."

"நான் அங்கே வரட்டுமா?" அயாகோவின் குரல் துக்கத்தில் உறைந்து கிடந்தது.

"அதற்கு அவசியமில்லை...."

"நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? கோபால் இதைச் செய்திருப்பார் என்று எண்ணுகிறீர்களா?"

"நாங்கள் எதையுமே, எல்லோரையுமே சந்தேகப்பட வேண்டும். அது தான் போலீஸ் தர்மம்."

கிஜிமாவின் உடலை அன்று மாலை ஸகூரா இயக்கத் தலைவர்களின் இறுதி மரியாதைகளுடன், செர்ரி மலர்க் கொத்துகளால் அலங்கரித்து, உப்புத் தூள் தூவி, மௌன ஊர்வலமாக எடுத்துச் சென்று, புனித ஜப்பான் மண்ணிலே புதைத்து முப்பத்தாறு மணி நேரமாகியும் அயாகோவின் விசும்பல் அடங்கவில்லை.

'தன் தாயின் மரணத்துக்கு யார் காரணம்? தற்கொலையா? கோபாலா? ஸகூரா இயக்கத்தின் எதிரிகளா? கோபால் ஏன் ஓடி மறைய வேண்டும்? எங்கே போயிருப்பான்?'

அயாகோ டெலிபோனைச் சுழற்றிப் போலீஸைக் கூப்பிட்டாள்.

"போலீஸ் 'இன்ஸ்பெக்டர் பேசுகிறேன்',"

"ஏதாவது துப்பு கிடைத்ததா?"

"இதுவரை எந்த விவரமும் தெரியவில்லை. இன்வெஸ்ட்டிகேஷனைத் தீவிர மாக்கியிருக்கிறோம்.... எப்படியும் கண்டு பிடித்து விடுவோம்."

ரிஸீவரை வைத்தாள். வைத்த மறு விநாடியே மணி அடித்தது. எடுத்த போது அயாகோவின் கண்கள் வியப்பில் விரிந்தன. கோபாலின் குரல்!

தேடினர். டெலிபோன் டைரக்டரியைத் துருவிய போது அந்த ஓட்டலின் ஜாதகமே கிடைத்தது.

போலீஸ் டொயாட்டோ அந்த ஓட்டலை நோக்கிப் புறப்பட்ட போது மணி நாலு. போக்குவரத்து நெரிசலில் அங்கங்கே டிராபிக் ஸிக்னல்கள் நிறம் மாறி வழிவிட, கார் 'ஹாப்பினஸ் இன்ன்' போய்ச் சேர்ந்தபோது மணி ஐந்து முப்பது.

ஓட்டல் வாசலில் கெய்ஷாக்கள் நடமாட்டம் அதிகமாயிருந்தது. சனிக்கிழமைகளில் அப்படித்தான்.

தொல்லைகளும், தொந்தரவுகளும் நிறைந்த அன்றுட வாழ்க்கையிலிருந்து விடுபட்டு, இரவு வாழ்க்கையில் புது உற்சாகங்களையும், எதிர்பார்ப்புகளையும் மனதில் ஏந்தி, வரும் ஜப்பான் ஆண்களின் தாகத்தைத் தீர்ப்பதற்கென இம்மாதிரி ஓட்டல்கள் எல்லைப்புறத்தில் ஏராளமாக உண்டு.

இங்கு வருகிறவர்கள் கவலைகளைக் களைந்து எறிவது போலவே, உடைகளையும் சுழற்றி வீசுகிருர்கள். நிர்வாணமாய் நீர்த்தொட்டிகளில் இறங்கிக் குளிக்கிருர்கள். பின்னர், ஓட்டல்களில் தரும் 'நைட் கவுன்'களையும், மரக் கட்டைச் செருப்புகளையும் அணிந்து கெய்ஷாக்களோடு ஜோடி ஜோடியாய்த் தெருவில் உலவுகிருர்கள்.

போலீஸார் ஓட்டல் டெஸ்க்கில் கோபாலைப் பற்றிக் கேட்ட போது "கோபால்! அந்தப் பெயரில் யாரும் இங்கே இல்லையே!" என்றனர்.

"76-ம் நம்பர் அறையில் இருப்பதாக கோபால் என்பவன் போன் செய்திருக்கிருன். நாங்கள் அந்த அறையைப் பார்க்க வேண்டும்."

கிளார்க் ரிஜிஸ்டரைப் புரட்டிஞன்.

"அந்த அறையில் அமெரிக்கர் ஒருவர் தங்கியிருக்கிருர். இதோ பாருங்கள்!" என்று கூறி ரிஜிஸ்டரைக்

காட்டினன். பிறகு அவர்களை மாடிக்கு அழைத்துச் சென்ருன்.

76—ம் நம்பரில் தங்கியிருந்த அமெரிக்கர் கெய்ஷா அழகி ஒருத்தியை நிர்வாணமாக்கி, தோல் உரித்த சாத்துக் குடி போல் வைத்திருந்தார். போலீஸைக் கண்டதும் அந்தப் பெண் குதித்து ஓடி, படுக்கை விரிப்பை உருவித் தன்னை மறைத்துக் கொண்டாள்.

அந்த அமெரிக்கர் முகத்தில் கொஞ்சம் அசடு தெரிந்தது.

"ஸாரி, ஸாரி!" ஆங்கிலத்தில் வருத்தம் தெரிவித்துக் கொண்டே பின் வாங்கிய இன்ஸ்பெக்டர் தம் சக போலீஸ் அதிகாரியைப் பார்த்து, "கோபால் என்பவன் நம்மை ஏமாற்றியிருக்கிருன். இந்த ஓட்டல் பெயர். ரூம் நம்பர் சொல்லி அயாகோவை நம்ப வைத்திருக்கிருன்! நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"இருக்கலாம்."

"முதலில் கோபால் போட்டோவைப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்வோம்."

"அவன் போட்டோ?"

"அமெரிக்காவிலுள்ள டிப்கோவைக் கேட்கலாம். போட்டோ அவர்களிடம் இருக்கும்." கிஜிமாவும் அவனும் தங்கியிருந்த அந்தத் தீவு ஓட்டலில் ஏற்கனவே அவனைப் பற்றிய விவரங்கள் சேகரித்திருந்தார்கள்.

ஓட்டல் 'ஹில்டாப்' பில் 990-ம் நம்பர் அறையில் காவலில் இருந்தான் கோபால். அந்த முரடர்கள் அவனுக்குத் தெரியாமல் அவனை கண்காணித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது மணி ஏழு. டோக்கியோவை இரவுப் போர்வை தழுவிக் கொண்டிருந்தது. கோபால் ஜன்னல் வழியாக வெளியே பார்த்த போது நகரம் மின்சாரப் பூச்சிகளாய்ச் சிலிர்த்துக் கொண்டிருந்தது.

நவீன வசதிகள் நிறைந்த ஆடம்பர ஓட்டல். கம்ப்யூட்டர்களும், கால்குலேட்டர்களும், மின் சாதனங்களும் ஓட்டலை நிர்வகித்துக் கொண்டிருந்தன.

"இந்த முரடர்களிடமிருந்து தப்பவே முடியாதா?" கோபால் சிந்தனையில் தீவிரப்பட்டிருந்தான். மனதில் நிம்மதி இல்லாதபோது சுற்றிலும் உள்ள சுகங்களும் ஆடம்பரங்களும் உற்சாகம் தருவதில்லை.

திடீரென்று அறைக்குள் அடர்த்தியாகப் புகைசூழ்ந்தது. கண்களில் எரிச்சல் உண்டாயிற்று. மூச்சு முட்டிற்று. அடுத்த கணம் ஓட்டல் முழுதும் எச்சரிக்கை மணி பயங்கரமாக ஒலித்தது. "தீ! தீ!" என்ற கூச்சலுடன் அறைகளிலிருந்து பதற்றத்துடன் வெளிப்பட்ட மக்கள் தலை தெறிக்க ஓடினார்கள். ஓட்டலே அல்லோலகல்லோலப்பட்டது. அடுத்த கணமே கோபால் அம்பெனப் பாய்ந்து லிஃப்டுக்கு ஓடினான். அங்கே சினிமா விட்டதுபோல் பெருங்கூட்டம் முட்டி மோதிக் கொண்டிருந்தது. முரடர்களுக்குத் தெரியாமல் அந்த கும்பலோடு சேர்ந்து நழுவி விட்டான்.

வெளியில் நெருப்பணைக்கும் படையினர் சடுதியில் தோன்றி போராடிக் கொண்டிருந்தனர். தீயணைக்கும் என்ஜின்களிலிருந்து புறப்பட்ட ஏணிகள் உயரத்தில் நீண்டு ஜன்னல் வழியாக ஆட்களை வெளியேற்றிக்கொண்டிருந்தன. கும்பலோடு சேர்ந்து லிஃப்ட்டில் புகுந்த கோபால் வேகமாக வாசலுக்கு விரைந்தான். அங்கே நின்ற டாக்ஸியில் பாய்ந்து ஏறி மிட்ஸூயோ ஸ்டோர் போய் நின்றான். அயாகோ டெலிபோனில் பேசிக் கொண்டிருந்தாள். திடீரென்று கோபால் எதிரில் வந்து நிற்பதைக் கண்டு திடுக்கிட்டாள்.

"பயப்படாதே! கடையை உள்பக்கம் பூட்டி விடு. அவர்கள் இங்கே வந்து கொண்டிருக்கிறார்கள். என்னை நம்பு எனக்கு உதவி செய்!" என்றான் கோபால்.

"யார் அவர்கள்?"

"என்னை ஓட்டல் ஓட்டலாக ஃபுட்பால் ஆடிக்கொண்டிருப்பவர்கள்!"

"நீ இப்போது எங்கிருந்து வருகிறாய்?"

"ஹில்டாப்'பிலிருந்து ..."

"ஹாப்பினஸ் இன் என்றது பொய்தானே?"

"இல்லை, அங்கிருந்து என்னை 'ஹில்டாப்' கொண்டு போய் விட்டார்கள். முதலில் கதவைத் தாளிடு. அப்புறம் எல்லாம் சொல்கிறேன்" அவனே கதவைச் சாத்தப் போனான்.

"மூடாதே! உன்னைப் பார்த்தால் எனக்கு பயமாயிருக்கிறது!" தடுக்க முயன்றாள்.

"ப்ளீஸ் ப்ளீஸ்!" அவன் பிடிவாதமாய் மூடிவிட்டான்.

முகமெல்லாம் வியர்க்க, கைகள் நடுங்க அவளை அவன் பரிதாபமாகப் பார்த்தான்.

"அயாகோ! தயவுசெய்து நான் சொல்வதைக் கேள்." நிதானமாய்ப் பேசினான். அவன் கண்களில் சத்தியம் தெரிந்தது.

"என்ன நடந்தது? உண்மையைச் சொல்."

வாசலில் யாரோ கதவைத் தட்டினார்கள். அயாகோ பயந்தபடியே கதவருகில் சென்று கண்ணாடி வழியாக வெளியே பார்த்தாள். மங்கலான ஒளியில் ஓர் உருவம் அவசரமாக ஓடி மறைவது தெரிந்தது.

அந்த உருவம் தெருக்கோடியில் நின்ற அந்த ஆசாமிகளிடம் ஓடிச் சென்று "ஆள் உள்ளேதான் இருக்கிறான்" என்றது.

"சரி; இனி போலீஸ் பார்த்துக் கொள்ளும். நம் கவலை விட்டது" என்று அந்த ஆசாமிகள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

"திடீரென ஹில்டாப்' ஓட்டல் தீப்பிடித்துக் கொண்டது. இதுதான் சமயமென்று அந்தக் குழப்பத்தில் முரடர்களிடமிருந்து தப்பி ஓடி வந்துவிட்டேன்."

"நிஜம்தானு?"

"நீ என்னை நம்ப மாட்டாய் என்று எனக்குத் தெரியும். சற்றுப் பொறு. இதோ சிறிது நேரத்தில் இந்த டெலி விஷனில் அந்தக் காட்சியை நீயே பார்க்கப் போகிருய்! டெலிவிஷனைத் திருகினுன். ஓட்டல் 'ஹில்டாப்' தீப் பிடித்து எரிந்து கொண்டிருந்தது.

# 5

'ஹில்டாப்' ஓட்டல் தீப்பற்றி எரிவதை டெலிவிஷனில் கண்டபோது அயாகோவுக்குச் சிறிது நம்பிக்கை பிறந்தது.

'கோபால் சொல்வது நிஜமாகத்தான் இருக்கவேண்டும். அப்படியானுல் 'ஹாப்பினஸ் இன்ன்'னில் இருப்பதாகச் சொல்லிவிட்டு எதற்காக ஹில்டாப் ஓட்டலுக்கு மாறினுர்?'

"என்னுடன் போனில் பேசியதை ஒருவேளை அந்த முரடர்கள் ஒட்டுக் கேட்டிருப்பார்களோ?" என்று கேட்டாள்.

"அப்படித்தான் நினைக்கிறேன்!"

"உன் காமிராவும் பெட்டியும் எங்கே?"

"இரண்டையும் அவர்கள் பிடுங்கிவைத்துக் கொண் டிருக்கிருர்கள்."

"பாஸ்போர்ட்?"

"நல்லவேளை, அதை மட்டும் என்னிடமே கொடுத்து விட்டார்கள். ஒருவேளை இந்த நாட்டை விட்டு நான் வெளியேறி விட்டால் போலீஸுக்கு என் மீதுள்ள சந்தேகம் வலுப்படும் என்று நினைத்திருக்கலாம்."

"என் அம்மாவைக் கொல்வதால் அவர்களுக்கு என்ன லாபம், கோபால்!"

"அப்புறம் 'ஸ்குரா'வின் பலம் ஒடுங்கிவிடுமே! ஆயில் எடுப்பதற்கு ஸகுராதானே குறுக்கே நிற்கிறது?"

"இதெல்லாம் உன் கற்பனை. நீ தப்பித்துக் கொள்வதற்காகச் சந்தேகத்தை அவர்கள் மீது திசை திருப்பிவிடும் சாமர்த்தியம் என்று போலீஸ் கருதினால்?"

"உண்மை என்றைக்காவது தெரியாமலா போய்விடும்? இப்போது நான் சொல்வதைக் கொஞ்சம் கவனமாகக் கேள். நானும் உன் தாயாரும் ஓகி ஐலண்டுக்குப் போகிறோம், ஸகுரா எதிரிகள் — கையாட்கள், எங்களுக்குத் தெரியாமலே எங்களைப் பின் தொடர்ந்து வருகிறார்கள். இரவு அந்த ஓட்டலிலேயே தங்குகிறார்கள். இந்தக் கொலை நடந்திருப்பது விடியற்காலை நேரம்.

கொலை நடப்பதற்கு அரை மணி முன்பாகவே அவர்களில் சிலர் என் அறைக்கு வந்து கிஜிமாவை ஆஸ்பத்திரியில் சேர்த்திருப்பதாகச் சொல்லி ஏமாற்றி என்னை வேறு ஓட்டலுக்குக் கொண்டு போய் விடுகிறார்கள். அதற்குக் காரணம் போலீஸ் என் மீது சந்தேகப்படட்டும் என்பது தான். அவர்கள் நினைத்த படியே இப்போது என்னைத் தானே சந்தேகப்படுகிறார்கள்?"

"நீ சொல்வது எல்லாமே ஒரு துப்பறியும் நாவல் போலிருக்கிறது, கோபால்!"

"அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. எனக்கு நீதான் முக்கியம். உன்னை நான் உயிருக்குயிராய் நேசிக்கிறேன். நீ இல்லாமல் நானில்லை என்று எண்ணுகிறேன். போலீஸ் என்னை நம்ப மறுக்கலாம். என் மடியில் கனமில்லாத போது நான் ஏன் பயப்படவேண்டும்?"

"நீ என்ன செய்யப் போகிறாய்?"

"இன்று இரவு முழுதும் உன்னோடு தங்கியிருக்கப் போகிறேன். இரவெல்லாம் பேசிக்கொண்டே இருக்கப் போகிறேன். உன்னோடு என் வாழ்க்கையை இணைத்துக் கொள்ளப் போகிறேன்."

"நீ என்ன சொல்கிறாய்?" புரிந்தும் புரியாதது போல் கேட்டாள்.

"உன்னை என் மனைவியாக்கிக் கொள்ளப் போகிறேன்."

"அதெப்படி முடியும்? நீ ஒரு...."

அவள் அழுதாள். அந்தக் கண்ணீரின் ஏதோ ஒரு துளியில் சம்மதம் இருந்தது.

"என் தாய் இறந்து முழுசாகப் பத்து நாள் கூட ஆகவில்லை, நான் திக்கற்றவள்."

"நானும்கூட உன்னைப் போல் ஒரு அனாதை தான்."

"போலீஸால் தேடப் படும் ஒரு குற்றவாளியோடு என் எதிர்காலத்தை எப்படி இணைத்துக் கொள்ள முடியும்?"

"என்னை நீ நேசிப்பது உண்மையானால் நம் திருமணத்துக்கு எதுவுமே தடையாக இருக்க முடியாது."

அவள் மீண்டும் அழுதாள். மௌனமாய்ப் பார்த்தாள்.

கடிகாரம் சங்கீதமாய் ஒலித்து 11 காட்டியது.

"சாப்பிடலாம் வாருங்கள்?"

"முதலில் குளிக்க வேண்டும், களைப்பாயிருக்கிறது. தலை வலிக்கிறது" என்றான்.

அவள் அவனுடைய நெற்றியை அழுத்திப் பிடித்து நரம்பு துடிப்பதை உணர்ந்தாள். தைலம் தடவி தேய்த்தாள், மாத்திரை கொடுத்து விழுங்கச் சொன்னாள். பாத்ரூமில் குளியல் தொட்டியில் வெந்நீர் நிரப்பி வைத்தாள்.

அவன் குளித்து விட்டு வருவதற்குள் டைனிங் டேபிளை ஒழுங்கு படுத்தி உணவு வகைகளை எடுத்து வைத்தாள்.

அவன் வந்தான்.

"தலைவலி இப்போது எப்படி இருக்கிறது?"

"உன் கைபட்டதும் பறந்து விட்டது."

சாப்பிட்டு முடித்தான்.

வாசலில் யாரோ கதவைத் தட்டினார்கள். அயாகோ விரைந்து சென்று கண்ணாடி வழியாகப் பார்த்தாள். வெளியே போலீஸ்.

அடுத்த சில நிமிடங்களில் போலீஸார் கோபாலைக் கைது செய்து வானில் கொண்டுபோனார்கள்.

வாசலில் வந்து நின்ற அயாகோ போலீஸ் வான் மறையும் வரை கண்களில் நீர் வழியப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் உடம்பெல்லாம், உள்ளமெல்லாம், உணர்வெல்லாம் கோபால் பரவியிருந்தான்.

# 6

சுருக்கமாக எழுதப்பட்டிருந்த அந்த அழைப்பிதழைப் படித்து முடித்த போது 'கௌதம்' உதடுகளைக் குவித்து ஒரு சின்ன விசில் அடித்தான். குஷி பிறக்கும் நேரங்களில் அவன் கொடுக்கிற உற்சாகக் குரல் அது.

ஸடாஹிகோ கொகாவா என்பது அவன் அசல் பெயர். 'கௌதம்' என்பது புனைபெயர்.

'இது ஏதோ ஓட்டல் விளம்பர ஸ்டண்ட்! போக வேண்டிய அவசியமில்லை' என்று எண்ணிக் கொண்டான்.

கடற்கரையில் புதிதாகத் தொடங்கப் பட்டுள்ள ஓர் ஆடம்பர ஓட்டலிலிருந்து வந்திருந்தது அந்த அழைப்பு.

'நான் அந்த அளவுக்குப் பணக்காரனுமல்ல பெரிய மனுஷனும் அல்ல, என்னை ஏன் அழைக்க வேண்டும்?' 'டோடோ' என்ற பெயரில் மிகப் பெரிய நட்சத்திர ஓட்டல்கள் ஜப்பான் முழுதும் சங்கிலித் தொடர்களாய் வியாபித்திருந்தன. அதன் தொடர்பாக இப்போது "தோன்றியுள்ள இன்னொரு புதிய ஓட்டல் இது.

ஒரு பெரிய பத்திரிகையில் ரிப்போர்ட்டர் வேலை பார்க்கும் கௌதம் ஒரு சாதாரண ஜர்னலிஸ்ட். கொஞ்சம் துப்பறியும் சக்தி, நகைச்சுவை உணர்வு, எந்தச் சூழ்நிலைக்கும் தன்னைப் பொருத்திக் கொண்டு விடும் சாமர்த்தியம் படைத்தவன். மூன்று குழந்தைகள் மனைவியுடன் டோக்கியோவில் ஈசான்ய மூலையில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தான்.

இவ்வளவு பெரிய ஓட்டல் இப்படி ஒரு 'சீப் ஸ்டண்ட்' அடிப்பானேன்?— அவனுடைய துப்பறியும் புத்தி வேலை செய்தது. தங்கள் ஓட்டலை விளம்பரப் படுத்த இம்மாதிரி 'குறுக்கு வழி' உபாயம் அவர்கள் தரத்துக்கு சரியானதல்ல. இதில் ஏதோ மர்மம் இருக்கிறது.

குண்டு குண்டாக எழுத்துக்கள் பெண் கையெழுத்தா யிருக்குமோ? அழைப்பிதழை மறுபடியும் படித்தான்.

திடீரென்று எங்களிடமிருந்து இப்படி ஓர் அழைப்பிதழ் வந்திருப்பது தங்களுக்கு மிகுந்த வியப்பாயிருக்கலாம். இந்தப் புதிய கடற்கரை ஓட்டலில் தாங்கள் அவசியம் ஓர் இரவு தங்கி இந்த ஓட்டலின் வசதிகளையும், ஆடம்பரங் களையும், இன்பங்களையும் அனுபவிக்க வேண்டும் என்பது எங்கள் விருப்பம். தாங்கள் எங்கள் அழைப்பை ஏற்றுக் கொள்வதாயிருந்தால் அடுத்த சனிக்கிழமை ஆகஸ்ட் முதல் தேதி மாலை ஆறு மணிக்கு வரவும். இந்தக் கடிதத்தை ரிஸப்ஷன் டெஸ்க்கில் காட்டினுல், அவர்கள் உங்களை நீங்கள் தங்க வேண்டிய அறைக்கு அழைத்துச் செல்வார்கள். பயணச் செலவுக்கு வேண்டிய பணத்தை யும் இத்துடன் இணைத்துள்ளோம்.'

தங்கள் வரவை எதிர்பார்க்கும், 'கடல்'

'கடல்! கடல்கூட அழைப்பு விடுமா? ஒரு வேளை யாராவது தெரிந்தவர்கள், நெருங்கிய நண்பர்கள் தமாஷ் செய்திருப்பார்களோ? ஏப்ரல் முதல் தேதி கூடப் போய் விட்டதே. என் அசல் பெயர், விலாசம் தெரிந்த யாரோ ஒருவர்தான் அனுப்பியிருக்க வேண்டும். போவதா. வேண்டாமா?--யோசித்தான். ஒரு முடிவுக்கு வந்தான், 'போவது' என்பதே அந்த முடிவு. அதற்கு மூன்று முக்கிய காரணங்க:

முதலாவது, வந்திருப்பது ஐம்பதாயிரம் யென். பெரிய தொகை. இதை எழுதியவர் விலாசம் தராததால் பணத்தைத்

திருப்பி அனுப்ப முடியாது. அழைப்பை ஏற்காவிட்டால் பிறர் பணத்தைக் காரணம் இன்றி ஏற்றுக் கொண்டதாகும்.

இரண்டாவது துப்பறியும் புத்தி, இதில் என்னதான் இருக்கிறது என்று பார்த்து விடலாமே என்கிற ஆவல்! கையெழுத்து ஒரு பெண்ணினுடையது போலிருப்பதால் இன்னொரு கவர்ச்சி. இவ்வளவு பெரிய ஓட்டலில் 'ஓர் இரவு' என்பதில் எத்தனையோ சமாசாரங்கள் அடங்கியிருக்கின்றன.

மூன்றாவது இத்தனை ஆண்டு நிருபர் வாழ்க்கையில் அவனுக்கு இது ஒரு புது அனுபவம். இதில் ஏதோ பெரிய மர்மம் அடங்கியிருக்கிறது. பார்த்து விட வேண்டியதுதான் என்கிற துடிப்பு.

ஒப்புக் கொண்டான்,

போன மாதம் 'யமூரிலாண்ட்' பத்திரிகை ஆசிரியர், ரிப்போர்ட்டர் கௌதமையும் போட்டோகிராபரையும் அழைத்து உடனே 'ஓகி' ஐலண்டுக்குப் போய் கிஜிமா மரணம் பற்றிய விவரங்களைப் பூரணமாக விசாரித்து அறிந்து வரும்படி உத்தரவிட்டார். இருவரும் அங்கே போய் கிஜிமா இறந்த அதே ஓட்டலில் ஐந்தாவது மாடியில் தங்கினர். பின்பக்கம் தோட்டத்தில் அவள் விழுந்து கிடந்த இடத்தையும், அவள் இறந்து கிடந்ததை முதலில் பார்த்த சிப்பந்தியையும் படம் எடுத்துக் கொண்டார்கள். கிஜிமாவின் வயது, அணிந்திருந்த கவுன் நிறம், கைப்பையி லிருந்த பொருளடக்கம், இவ்வளவையும் தெரிந்து கொண்டார்கள். கடைசியில் அந்த ஓட்டலில் தங்கியிருந்த வெளிநாட்டுப் பயணிகளைப் பேட்டி கண்டு சம்பந்தமில்லாத பல தகவல்களையும் சேகரித்துக் கொண்டனர்.

ஆசிரியரிடம் போய் " 'ஸகுரா' இயக்கத் தலைவி கிஜிமாவின் மரணம் இயற்கையானது அல்ல. இதில் பெரிய மர்மம் அடங்கியிருக்கிறது. அவள் இறக்கும்போது அவள் கையில் 'எஸ். கே' என்ற எழுத்துக்கள் பொறித்த கைக்குட்டை ஒன்று இருந்தது. எஸ்.கே. என்பது அவள்

இனிஷியலாயிருந்தாலும் அந்தக் கைக்குட்டை அவளுடையது தானு என்பது நிச்சயமாய்த் தெரியவில்லை. ஆராய்ந்து அறிய வேண்டும்'' என்ருர்கள்.

''இதற்காகத்தான் உங்களை அனுப்பினேனு? பழைய சங்கதிகளையே சொல்கிறீர்களே?'' என்று சற்று கடுமையாகவே பேசி விட்டார் ஆசிரியர்.

கௌதம் ரோஷப்பட்டுக் கொண்டு 'இந்த வேலையை ராஜினுமாச் செய்து விடலாமா?' என்ற அளவுக்கு வந்து விட்டான். ஒரு வாரம் லீவு போட்டு விட்டு வீட்டிலேயே உட்கார்ந்து விட்டான்.

''இதைக் காட்டிலும் உங்களுக்கு வேறு நல்ல வேலை கிடைத்து விடாது. நீங்கள் முன்னுக்கு வர முடியாமல் போனதற்குக் காரணமே உங்கள் ரோஷபுத்திதான். அடிக்கடி வேலையை விட்டு விட்டு வந்து விடுவதுதான். நாளையிலிருந்து ஒழுங்காக ஆபீஸுக்குப் போங்கள்'' என்று விரட்டி அனுப்பினுள் அவன் மனைவி.

லீவு முடிந்து ஆபீஸுக்குப் போன போதுதான் இப்படி ஒரு விநோதமான அழைப்பு.

சனிக்கிழமை ஆகஸ்ட் முதல் தேதி. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை. ஆசிரியரிடம் கூட அனுமதி பெற வேண்டிய அவசியமில்லை.

போய்ப் பார்த்து விடுவதென்று தீர்மானித்தான். டாக்ஸியைக் கூப்பிட்டு ஏறிக் கொண்டான். 'டோடோ' கடற்கரை ஓட்டலுக்குப் போய் மறுநாள் திரும்பி வர மொத்தமாக வாடகை பேசிக் கொண்டான்.

ஏர்கண்டிஷன் டாக்ஸி!

சனி, ஞாயிறு ஆனதால் வழியெல்லாம் ஏராளமான கார்கள். கடற்கரை ஓரமாகவே ரோடு. இந்தப் பக்கம் பசுமையான மலைகள். அந்தப் பக்கம் நீலக் கடல்!

அந்த ஓட்டலில் தனக்காக யார் காத்திருப்பார்கள்? தன்னை அழைத்தது யாராயிருக்கும்? இந்தக் கேள்விகளைத் தனக்குத் தானே கேட்டுக் கொண்டான். வயிற்றில் ஒரு திகில் தோன்றியது.

கடிதத்தை 'டெஸ்க்'கில் காட்டிய போது அங்கிருந்த கிளார்க் கௌதமைப் புன்னகை மலர வரவேற்றான்.

அந்த கிளார்க் ரொம்ப அடக்கமாக, அமைதியாக இருந்தான். கௌதமை இது மேலும் குழப்பியது. தன்னை அழைத்த ஆசாமி மிக முக்கியமானவராய்த்தான் இருக்க வேண்டும் என்று நினைத்தான். அது யாராயிருக்கும்?

ஓட்டல் 'பையன்' வந்து கௌதமை மேலே அழைத்துச் சென்றான்.

அந்த ஹாலில் ஜோடி ஜோடியாய், குடும்பம் குடும்பமாய்க் கூட்டங்கள். கௌதமுக்கு எதையும் அனுமானிக்க முடியவில்லை. பையனோடு லிஃப்ட்டுக்குப் போனான்.

தன்னை யாரும் 'பொறி' வைத்துப் பிடிக்கவில்லை என்ற தைரியம் பிறந்தது.

ஆறாவது மாடித் தாழ்வாரத்தில் அடர்த்தியான, மிருதுவான நீல விரிப்பின் மீது நடந்தான். பல இடங்களில் திரும்பித் திரும்பிப் போய்க் கடைசியாகப் பெரிய பளபளப்பான கைப்பிடிகள் தெரிந்த அறைக் கதவுக்கு முன்னால் நின்றான். 'வி. ஐ. பி' என்ற ஆங்கில எழுத்துக்கள் கதவில் மின்னின. 'பையன்' கதவைத் தட்டி அழைத்து விட்டு, கௌதமைப் பார்த்து வளைந்து வணங்கிய பின் திரும்பிக் கீழே போய் விட்டான்.

கௌதம் தயங்கியபடியே கதவின் குமிழைத் திருகினான். ஏற்கெனவே லேட். கதவு திறந்து கொண்டது. உள்ளே போனான். அங்கு உட்கார்ந்திருந்த நாலு பேரும் இவனை அக்கறையோடு பார்த்தார்கள். இரண்டு ஆண்கள். இரண்டு பெண்கள். யார் முகத்திலும் சிரிப்பு இல்லை.

விசாலமான அறை. ஆடம்பரமான அலங்காரங்கள். வலது பக்கம் இன்னொரு அறைக்கு வழி தெரிந்தது. இடது பக்கம் மற்ருெரு அறை இருந்தது. எதிரில் பால்கனி. கண்ணுடித் தடுப்புகளுக்குப் பின்னுல் நீலத் திரை கடல். கடலில் வெகு அருகாமையில் சிறுசிறு தீவுகள். நீந்தியே அந்தத் தீவுகளை அடைந்து விடக் கூடிய சமீபம்!

ஹாலில் தலைக்கு மேலே உயரத்தில் சாண்ட்லியர்கள் முணு முணுத்துக் கொண்டிருந்தன. வட்டமான மேஜை யைச் சுற்றிலும், ஆளை விழுங்கும் குஷன் நாற்காலிகள் ஐந்து. அவற்றில் ஏற்கெனவே நாலு பேர் உட்கார்ந்திருந் தார்கள். ஒன்று கௌதமுக்காகக் காத்திருந்தது. கௌதம் அவர்களைப் பார்த்து ஓர் அசட்டுச் சிரிப்புடன் அந்த ஐந்தாவது நாற்காலியில் அமர்ந்து கொண்டான். அவர் களில் யாரையுமே அவனுக்குத் தெரியவில்லை. எல்லாருமே புது முகங்கள். 'ஒருவேளை தவருன அறைக்கு வந்து விட்டேனே?'

திடீரென்று மூன்று பையன்கள் அறைக்குள் வந்தார்கள். அவர்களோடு விஸ்கி, ஷெர்ரி, பீர்! ஒவ்வொருவரையும் தனித்தனியாக விசாரித்து என்ன வேண்டும் என்று கேட்டு அவரவர்களுக்கு வேண்டியதைக் கொடுத்து விட்டுப் போனுர்கள். மறுபடியும் மௌனம் அந்த மௌனத்தைக் கலைக்கும் வகையில்பானம் உறிஞ்சும் மெலிதான ஓசை!

கௌதமுக்கு எதிரில் கடோத்கஜன் மாதிரி ஓர் ஆசாமி. பார்க்க மிடுக்காயிருந்தான். ஐம்பது வயது மதிக்கக்கூடிய தோற்றம். ஏதோ ஒரு பெரிய கம்பெனியின் எக்ஸிக்யூடிவ் போலிருந்தான்.

அவனுக்குப் பக்கத்தில் ஒரு வாலிபன். இருபத்திரண்டு வயது மதிக்கலாம். கூர்மையான மூக்கு. முகத்தில் எந்த பாவமும் இல்லை. கல்லூரி மாணவனைப் போலிருந்தான்.

கௌதமின் வலது புறத்தில் நாற்பது வயதில் ஓர் அம்மாள். மிக நாகரிகமான தோற்றம். விலையுயர்ந்த

ஆடைகள். பணக்காரத்தனம். யாரோ ஒரு பெரிய பணக்காரனுக்கு வாழ்க்கைப் பட்டிருக்கிறாள். கொஞ்சம் ஒல்லி. எளிதில் யாரிடமும் பழகிவிட மாட்டாள். கேட்டால் பதில் கிடைக்கும் என்று நிச்சயமில்லை.

இடது பக்கம். இருபது வயதில் ஒரு பெண். அழகிய முகம். கவர்ச்சியான உடல். கால்மீது கால் போட்டு உட்கார்ந்திருந்தாள். சிலை வடிவம்போல் வலிமையான கால்கள். தொடைகளின் மீது இறுக்கமாகப் பூசிய மாதிரி கவுன். கௌதம் — மூன்று குழந்தைகளின் தகப்பன், அவள் தொடைகளையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆறு மணி அடித்தது. ஒன்றும் நடக்கவில்லை. நிசப்தம். மௌனத்தை ஒருவருமே கலைக்கவில்லை. கௌதம் பொறுமை இழந்தான். உள்ளத்தில் கோபம் பொங்கியது. அந்த நாலு பேரும் தன்னைப்போல் அழைக்கப் பட்டவர்கள்தான் என்பதில் அவனுக்குச் சந்தேகமில்லை. எதற்கு இப்படி எல்லோரையும் அழைத்து உட்கார வைத்திருக்கிறார்கள்? இடது பக்கம் திரும்பி அந்தப் பெண்ணைப் பார்த்து, "எக்ஸ்யூஸ் மி! உங்களுக்கு அழைப்பு வந்ததா? அதற்காகத்தான் வந்திருக்கிறீர்களா?" என்று கேட்டான்.

"ஆமாம்" என்றாள். அவனுக்குக் கொஞ்சம் தெம்பு வந்தது.

"யார் நம்மை அழைத்ததென்று ஏதாவது தெரியுமா?"

"தெரியாது; எல்லாம் மூடுமந்திரமாக உள்ளது. நான் வரவேண்டாம் என்று தான் முதலில் நினைத்தேன். ஆனால் கடிதத்தில் ரொம்ப முக்கிய விஷயம் என்று குறிப்பிட்டிருந்தது. என் ஆவலை அடக்க முடியவில்லை. செலவுக்கு எழுபதாயிரம் யென் பணம் வேறு அனுப்பியிருந்தார்கள். எப்படி வராமலிருக்க முடியும்? வந்து விட்டேன்."

"எங்கிருந்து வருகிறீர்கள்?"

"நகோயா."

"அவ்வளவு தூரத்திலிருந்து வருகிறீர்களா? அதனுல் தான் எழுபதாயிரம்!"

அந்த நாற்பது வயதுக்காரி கொஞ்சம் அழுத்தமாகவே இருந்தாள். மெலிதான உதடுகளுக்குள்ளிருந்த பற்கள் வெளியே தெரியாமல் அழுத்தமாய், அழுத்தலாய் உட்கார்ந்திருந்தாள்.

"உங்கள் சமாசாரம் என்ன?" என்பது போல் அவளைப் பார்த்தான் கௌதம்.

"எனக்கும் இதே மாதிரி அழைப்பு வந்திருக்கிறது. நானும் முதலில் வர வேண்டாம் என்றுதான் நினைத்தேன். என் கணவரைப் பற்றிய ரகசியம் என்று எழுதியிருந்தார்கள். முப்பதாயிரம் யென் பணமும் அனுப்பியிருந்தார்கள். எப்படி வராமலிருக்க முடியும்?" என்று கூறி அந்தக் க்வரை மேஜை மீது போட்டாள்.

"நீங்க டோக்கியோவிலிருந்து வருகிறீர்களா?"

"ஆமாம்" என்ருள் அவள்.

"நான் யோகஹாமாவிலிருந்து வருகிறேன். எனக்குக் கடற்கரை என்ருல் ஒரே பைத்தியம். இப்படி ஒரு நாள் சந்தோஷமாய்ப் பொழுது போக்கச் சந்தர்ப்பம் கிடைத்தால் அதைவிட்டு விட மனம் வருமா? வந்துவிட்டேன்!" என்று தாமாகவே முகமலர்ச்சியுடன் கூறினர் அந்த எக்ஸிக்யூடிவ்.

"உன் விஷயம் என்ன?" என்று அந்த இளைஞன் பக்கம் திரும்பிக் கேட்டான் கௌதம்.

"இதே கதைதான்" என்ருன் அவன்.

"உன் அழைப்பில் என்ன எழுதியிருக்கிறது?"

"ஒரு பெண் உனக்காகக் காத்திருப்பாள். நீ அவளுடன் இன்பப் பொழுது போக்கலாம் என்று...." பீரைக் காலி செய்தான் வாலிபன்.

அவர்கள் ஐவரையுமே "கடல்" அழைத்திருக்கிறது என்பது தெளிவாகி விட்டது. ஒவ்வொருவரையும் ஒவ்வொரு மாதிரி ஆசை காட்டிக் கூப்பிட்டிருக்கிறது.

கௌதம் அந்த இரவில் இன்பங்களை எதிர்பார்த்து வந்திருக்கிறான்.

அந்த இளைஞனைப் பெண் மோகம் சுண்டி இழுத்திருக்கிறது.

"கடற்கரையில் இனிமையாகப் பொழுது போக்கலாம்" என்ற ஆவலில் அந்த எக்ஸிக்யூடிவ் வந்திருக்கிறார். அவருடைய வீக்னஸ் அது.

இந்த மாதிரி ஆசைக்கெல்லாம் பெண்கள் மசிய மாட்டார்கள் என்பதால் அந்தப் பெண்கள் இருவருக்கும் மட்டும் வேறு மாதிரியான அழைப்பு.

ஒருத்திக்கு முக்கியமான ஒரு ஆசாமி பற்றிய ரகசியம். இன்னொருத்திக்கு கணவரைப் பற்றிய ரகசியம். செலவுக்குப் பணம் வேறு 'வேண்டாமே' என்று ஒதுக்கிவிட முடியுமா? 'போய்தான் பார்ப்போமே?' என்று தூண்டுகிற அழைப்பல்லவா?

அழைக்கப்பட்ட ஐந்து பேருமே தவறாமல் வந்துவிட்டார்கள்.

அடுத்து, ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொண்டார்கள். அந்த இருபது வயது மங்கையின் பெயர்,—ஷினோடி கொமாய். ஒரு கம்பெனியில் வேலை.

ஐம்பது வயதுக்காரர் பெயர்,— ஸுஜுரா கோஷிகாவா. யோகஹாமாவிலுள்ள ஒரு வியாபார நிறுவனத்தின் எக்ஸிக்யூடிவ்.

அந்த இளைஞன் ஒரு மாணவனேதான். இன்னமும் படித்துக் கொண்டிருக்கிறான். பெயர்,—ஷிரோ கயமா.

அந்த நாற்பது வயதுக்காரி ஒரு டாக்டரின் மனைவி. பெயர்,—ஷிகிகோ காமி. கணவர் டோக்கியோ ஆஸ்பத்திரி ஒன்றில் ஸர்ஜன்.

ஐந்து பேருமே இதற்கு முன் ஒருவரை ஒருவர் பார்த்ததில்லை. அறிந்ததில்லை. எதற்காக இவர்களை இங்கே அழைத்திருக்கிறார்கள்? அழைத்தது யார்? ஆணா, பெண்ணா? அந்த ஆசாமி எங்கே?

# 7

அந்த இளைஞன் தன் கைக் கடிகாரத்தைப் பார்த்து "மணி ஏழு!" என்று அலுப்புடன் கொட்டாவி விட்டான். மேலும் கொஞ்சம் பீர் குடித்தான்.

"நான் வீட்டுக்குப் புறப்படலாமா என்று பார்க்கிறேன்" என்ற நாற்பது வயதுக்காரி தன் கைப்பையை எடுத்துத் தோளில் மாட்டிக்கொண்டாள்.

"யாரோ நம்மைச் சரியான முட்டாளாக்கியிருக்கிறார்கள்" என்று சிரித்தாள் இருபது வயது மங்கை.

"ஆயிரக் கணக்கில் பணம் செலவழித்து நம்மை இங்கே அழைத்திருக்கிறார்கள் என்றால் அது சும்மா வேடிக்கை பண்ணுவதற்காக இராது" என்றார் ஐம்பது வயதுக்காரர்.

"சரி, அப்படின்னு எதுக்குக் கூப்பிட்டாங்க? கூப்பிட்டது யார்? அவர் எங்கே? இப்படி சும்மவோ உட்கார்ந்து கொண்டிருந்தால் எப்படி?" என்று அலுத்துக் கொண்டாள் நாற்பது வயதுக்காரி.

"இந்த ஜப்பானில் எத்தனையோ கோடி பேர் இருக்காங்க. அதிலே நம்ம ஐந்து பேரை மட்டும் பொறுக்கிக் கூப்பிட்டிருக்காங்கன்னு, அதிலே ஏதோ ஒரு அர்த்தம் இருக்கிறது. நம்ம ஐந்து பேருடைய பெயர், விலாசம், வயது அத்தனையும் கண்டுபிடிச்சு எழுதியிருக்கிறார்களே, அதில்தான் மொத்த ரகசியமே அடங்கியிருக்கிறது" என்றான் நிருபர் கௌதம்.

"நம்ம ஐந்து பேரும் ஒருத்தருக்கொருத்தர் முன்பின் அறிமுகமில்லாதவர்கள். நம்மை எதுக்கு அழைக்கணும்? இதில் என்ன அர்த்தம் இருக்கிறது?"

"நமக்கே தெரியாமல் ஏதாவது இருக்கும்!"

"அது என்ன மர்மமோ?" எல்லாருமே யோசித்தார்கள்.

"ஒரு வேளை நம் ஐந்து பேருடைய பிறந்த தேதியில் ஒற்றுமை இருக்கலாம். ஒரே தேதியில் பிறந்திருக்கலாம்!" என்றார் ஐம்பது.

"நாம் ஐந்து பேரும் எந்தப் பத்திரிகைக்காவது சந்தா கட்டியிருக்கலாம். அதிலிருந்து அட்ரஸ் பிடிச்சிருப்பாங்க" என்றான் இளைஞன்.

"ஊஹூம்; அதெல்லாம் இருக்காது. எதுக்கும் ரிஸப்ஷன் டெஸ்க்கைக் கூப்பிட்டு விசாரித்து விடுகிறேன். ஏதாவது தகவல் தெரியுதா, பார்க்கலாம்" என்றான் கௌதம்.

எழுந்து போய் டெலிபோனை எடுத்துப் பேசினான், பல கேள்விகள் கேட்டான். கடைசியில் தோளைக்குலுக்கிக் கொண்டு "அவர்களுக்கு ஒன்றும் தெரியாதாம். பத்து நாளைக்கு முன்பே இந்த ரூமை யாரோ 'நகுமாரா' என்ற பெயரில் இன்றைய தேதிக்கு புக் செய்து விட்டுப் போனார்களாம். இன்று மாலை ஐந்து பேர் வருவார்கள். அவர்களுக்கு வேண்டிய வசதிகளெல்லாம் செய்து கொடுங்கள் என்று சொல்லி ஏராளமான பணத்தையும் அட்வான்ஸாகக் கொடுத்து விட்டுப் போயிருக்கிறார்களாம். யார் அந்த நகுமாரா என்று கேட்டால் தெரியவில்லை என்கிறார்கள். எல்லாம் வேடிக்கையாயிருக்கிறது? ஒரே மர்மமாயிருக்கிறது. நம்மாலும் ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை. நான் ஒரு பத்திரிகை நிருபர். துப்புத்துலக்குவதில் கெட்டிக்காரன் என்று பெயர். இப்போது துப்புக்கெட்டவனாய் எதுவும் புரியாமல் விழிக்கிறேன். வெட்கமாயிருக்கிறது" என்றான் கௌதம்.

எல்லோரும் பேந்தப் பேந்த விழித்து விட்டு, கொஞ்சம் அசட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டே 'சரியான இளித்த வாயர்களாயிட்டோம்' என்றனர்.

"சரி, வந்தது வந்தோம். இராத்திரி இங்கேயே தங்கி 'தமாஷ்' அனுபவித்து விட்டுப் போவோம்" என்றான் இளைஞன்.

"நாங்கள் வீட்டுக்குப் போகிறோம்" என்று புறப்பட்டனர் அந்த இரண்டு பெண்களும்.

"திடீரென்று "ஹய்!" என்று எழும்பிக் குதித்தான் கௌதம்.

"என்ன? என்ன?" என்று மற்ற நால்வரும் ஆவலோடு கேட்டார்கள்.

"கண்டு பிடிச்சுட்டேன்!" என்றான் கௌதம் மகிழ்ச்சி பொங்க.

"சீக்கிரம் சொல்லுங்க! என்னத்தைக் கண்டுபிடிச்சீங்க?"

"இப்ப அவங்கவங்க பெயரை ஒரு காகிதத்தில் இங்கிலீஷில் எழுதி என்னிடம் கொடுங்கள்" என்றான்.

எழுதிக் கொடுத்தார்கள்.

1. ஷிஞேடி கொமாய்
2. ஸுஜுரா கோஷிகாவா
3. ஷிரோ கயமா
4. ஷிகிகோ காமி

"எல்லார் பெயரிலும் 'எஸ்.கே.' என்ற எழுத்துக்கள் இனிஷியலாக இருப்பதைப் பார்த்தீர்களா?"

நாலு "ஆமாம்"கள்!

ஆச்சரியத்தில் வாயடைத்து நின்றார்கள்.

"இப்போது உங்களுக்கு ஏதாவது ஞாபகம் வருகிறதா?"

"ஒன்றும் தெரியலையே!"

"எஸ். கே." என்ற எழுத்துக்கள் உங்களுக்கு எதையுமே ஞாபகப்படுத்த வில்லையா?"

விழித்தார்கள்.

"நான் சொல்கிறேன். சில நாட்களுக்கு முன் 'ஓகி' ஐலண்டில் ஸகுரா இயக்கத் தலைவி இறந்து விட்டாளே,

ஞாபகம் இருக்கிறதா? அவள் முழுப் பெயர் என்ன தெரியுமா? ஸெட்ஸுகோ கிஜிமா. அவள் இனிஷியலும் எஸ். கே. தான். அவள் இறக்கும்போது அவளுடைய கையில் ஒரு கைக்குட்டை இருந்தது. அந்த கைக்குட்டையில், எஸ். கே. என்ற எழுத்துக்கள் இருந்தன. 'அது அவளுடைய கைக்குட்டையா, அல்லது அவளை யாராவது கொல்ல முயன்ற போது அவர்கள் கையில் வைத்திருந்த கைக்குட்டையா?' என்பதை போலீஸ் இன்னும் ஆராய்ந்து கொண்டிருக்கிறது" என்றான் கௌதம்.

"ஆமாம்! நாங்க கூட பத்திரிகையிலே பார்த்தோம்."

"இப்ப நம்ம ஐந்து பேர் 'இனிஷியலும் 'எஸ். கே.' என் பெயர் ஸடாஹிக்கா கொகாவா. நானும் எஸ். கே. தான். அந்தக் கொலைக்கு நம் ஐந்து பேரில் யாராவது சம்பந்தப்பட்டிருப்போமோ என்று சந்தேகப்பட்டிருக்கிறார்கள். அதனால்தான் 'கடல்' என்ற பெயரில் நம்மை இங்கே அழைத்து மோத விட்டிருக்கிறார்கள். இதுதான் என்னுடைய யூகம்!"

"உங்கள் யூகம் ரொம்ப சரி; ஆனாலும் எஸ். கே. என்ற எழுத்துக்கள் நம் இனிஷியலாயிருப்பது மட்டும் நம்மை இங்கே அழைப்பதற்குக் காரணமாயிராது. இந்த ஜப்பானில் எத்தனையோ எஸ்.கே.க்கள் இருப்பார்களே, அவர்களையெல்லாம் கூப்பிடாமல் நம் ஐந்து பேரை மட்டும் ஏன் அழைத்திருக்கிறார்கள்? இனிஷியலைத் தவிர வேறொரு காரணம் இருக்க வேண்டும்" என்றார் ஐம்பது.

"அதென்ன?" என்று கேட்டான் கௌதம்.

"கிஜிமா இறந்த அன்று நான் அந்த ஓட்டலில் தங்கியிருந்தேன். அதைப் போல நீங்களும் தங்கியிருக்கலாம். கொலை நடந்த அன்று அந்த ஓட்டலில் தங்கிய பெயர்களில் எஸ். கே. என்ற இனிஷியல் உள்ளவர்களை அழைத்திருக்கிறார்கள். நீங்கள் யாரும் தங்கவில்லை என்றால் அதைச் சொல்லுங்களேன்" என்றார் ஐம்பது.

"ஆமாம், தங்கினோம். தங்கினோம். இப்போதுதான் நினைவுக்கு வருகிறது. நன்றாய் ஞாபகம் இருக்கிறது. நாங்கள் அந்த ஓட்டலில் தங்கிய அன்றுதான் கிஜிமா ஜன்னல் வழியாகக் கீழே விழுந்து இறந்து போனாள்" என்று நாலு பேருமே ஒப்புக் கொண்டார்கள்.

கௌதம் எழுந்து போய்க் கண்ணாடி வழியாகக் கடலை வெறித்துப் பார்த்தான். அவனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை கிட்டத்தட்ட கொலையாளியைக் கண்டு பிடித்து விட்ட மாதிரி வெற்றிப் பரவசத்தின் கிளுகிளுப்பு அவன் உடலெங்கும் ஊடுருவியது.

'கிஜிமா இறந்த அன்று அந்த ஓட்டலில் தங்கியவர்களைக் கூப்பிட்டிருக்கிறார்கள். ரொம்ப சரி; ஆனால் நான் தங்கவில்லையே! அப்படியிருக்க தனக்கும் அழைப்பு வந்திருக்கிறதே, அது எப்படி?' என்று தனக்குள் ஒரு கேள்வியை எழுப்பிக்கொண்டான் கௌதம்.

•

# 8

அறையில் நிசப்தம் குறுக்கிட்டது. லேசான அதிர்ச்சியில் நால்வருமே சிறிது நேரம் பேச்சற்றுப் போனார்கள். கண்ணாடி வழியாகக் கடலை வெறிக்கப் பார்த்துக்கொண்டு நின்ற கௌதம் மெதுவாகத் திரும்பி வந்து தன் ஆசனத்தில் அமர்ந்தான். தீவிரமான சிந்தனையோடு 'பால்பாயிண்ட்' எடுத்து காகிதத்தில் புத்தர் சித்திரம் வரைந்தான். ஆழ்ந்து சிந்திக்கும் நேரங்களில் அவனுக்கு புத்தர் துணை புரிவார்! அந்த இருபது வயதுப் பெண் சற்று அவன் பக்கம் சாய்ந்து அந்த புத்தரை எட்டிப் பார்த்தாள்.

இடதுகை கட்டை விரலில் தொடங்கி ஒன்று இரண்டு என்று ஐந்து வரை எண்ணினான். ஏதோ சொல்ல வாயெடுத்

தான். நீதிபதியின் தீர்ப்புக்குக் காத்திருப்பது போல் மற்ற நால்வரும் அவனையே பார்த்தார்கள்.

"உங்க நாலு பேரில் ஒருவர்தான் கிஜிமாவைக் கொலை செய்திருக்கிறீர்கள்!" என்று திடுமென ஒரு குண்டைத் தூக்கிப்போட்டு அவர்கள் முகம் மாறுகிறதா என்று கவனித்தான்.

அவர்கள் லேசாகச் சிரித்தார்கள். "ஸ்டுபிட்!" என்றான் வாலிபன்.

"அன்று அந்த ஓட்டலில் எஸ். கே. என்ற இனிஷியலில் நீங்கள் நாலு பேர் மட்டுமே தங்கி இருக்கிறீர்கள். 'எஸ். கே.' என்ற எழுத்துக்கள் உள்ள கைக்குட்டை ஒன்று இறந்து கிடந்த கிஜிமாவின் கையில் இருந்திருக்கிறது. அவள் அறைக் கதவு திறந்து கிடந்திருக்கிறது. இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?"

"ஏன், அப்படிப் பார்த்தால் உங்க இனிஷியல் கூட எஸ். கே. தான். நீங்களே கூட கிஜிமாவைக் கொன்றிருக்கலாமே!' என்று கௌதமை மடக்கினான் அந்த மாணவ இளைஞன்.

கௌதம் பெரிதாகச் சிரித்து, கைகளிரண்டையும் முன் நீட்டி விரித்து, தோளை ஒரு முறை குலுக்கி "முதலாவது, நான் அந்த ஓட்டலில் தங்கவேயில்லை. இரண்டாவது, கைக்குட்டை உபயோகிக்கும் பழக்கமும் எனக்குக் கிடையாது" என்றான்.

"அப்படியானால் உங்களுக்கு ஏன் இந்த அழைப்பு வரவேண்டும்? அழைப்பு அனுப்பியவர்களுக்கு உங்கள் மீதும் சந்தேகம் இருக்கிறதுஎன்று தானே அர்த்தம்?"

"கிஜிமா கொலை சம்பந்தமாகப் பத்திரிகை நிருபர் என்ற முறையில் தகவல் சேகரிக்க நான் அந்த ஓட்டலுக்குப் போயிருந்தது உண்மை. ஆனால் கொலை நடந்த மறுநாள் காலைதான் போனேன். அந்த ஓட்டலில் மறுநாள் தான்

தங்கினேன். ஒருவேளை ஓட்டல் ரிஜிஸ்டரைப் பார்த்து எழுதியவர் என் பெயரிலும் 'எஸ். கே.' இருப்பதால் எனக்கும் அழைப்பு அனுப்பியிருக்கலாம். எனக்கும் இது ஆச்சரியம்தான்'' என்றான் கௌதம்.

''நான் அன்று அந்த ஓட்டலில் தங்கியிருந்தேன். ஆனால் எனக்கு எதுவுமே தெரியாது'' என்றார் ஐம்பது வயதுக்காரர்.

அந்த மாணவன் சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறீங்க?'' கௌதம் கேட்டான்.

''இந்த அழைப்பு அனுப்பினவங்களுக்குக் கொஞ்சமாவது புத்தி இருந்தால் இப்படிச் செய்திருக்க மாட்டார்கள். நம்ம ஐந்து பேரில் யாராவது கொலை செய்திருந்தால் இங்கே வந்திருப்போமா? குற்றவாளியைக் கண்டு பிடிக்கத்தான் இப்படி சூழ்ச்சி செய்கிறார்களோ என்று பயந்திருப்போமே! இதுகூடத் தெரியலையே அவர்களுக்கு!'' என்றான் மாணவன்.

''அதுவும் ஒரு பாயிண்ட்தான். ஆனால் அழைப்பு அனுப்பியவங்க இதைப் பற்றி யோசிக்காமலா இருந்திருப்பாங்க? யார் இங்கே வரலையோ, அந்த ஆசாமி பயந்து போய்தான் இங்கே வரவில்லை என்பது தெரிந்துவிடும் இல்லையா? ஒருவேளை அப்படி யாராவது வராமலிருக்கிறார்களா என்று பார்ப்பதற்காகத்தான் இப்படி ஒரு சூழ்ச்சி செய்திருக்கிறார்களோ, என்னவோ?'' என்றான் கௌதம்.

''அதுசரி; அதேமாதிரி 'தான் வரவில்லையென்றால் பயந்து போய்தான் வரவில்லை என்று நினைப்பார்களே' என்று எண்ணிக்கூட எல்லோரும் வந்திருக்கலாம் இல்லையா?'' என்றாள் நாற்பது வயதுக்காரி.

''அதுவும் சரிதான்'' என்றான் கௌதம்.

"இது என்னமோ கொக்கு தலையில் வெண்ணெய் வெச்சு பிடிக்கிற கதையாயிருக்கு. நம்ம ஐந்து பேரையும் அவங்கவங்க வீட்டுக்கே வந்து தனித்தனியா விசாரித்திருக்கலாம்" என்றாள் இருபது வயது மங்கை.

"அந்த யோசனை அவங்களுக்குத் தெரியாமல் இருந்திருக்காது. ஒரு அர்த்தத்தோடதான் இங்கே வரவழைச்சிருக்காங்கன்னு எனக்கு படுது"

"என்ன அர்த்தம்?"

"இந்தக் கொலைக்குப் பின்னாலே பெரிய சதிக் கூட்டம் ஒன்று இருக்கலாம். அவங்க மூலமா இந்தக் கொலை நடந்திருக்கலாம். கிஜிமா சாதாரணமானவங்க இல்லை. ஸகுரா இயக்கத்தின் தலைவி. அந்த இயக்கம் பலம் வாய்ந்த ஓர் இயக்கம். இந்த நாட்டிலுள்ள பல தொழில் அதிபர்களுக்கு இடையூறான இயக்கம். ஆகையால் கிஜிமாவை யாரோ ஒருவன் மூலமாய் 'க்ளோஸ்' பண்ணியிருக்காங்க. நம்ம ஐந்து பேரையும் தனித்தனியா பார்க்காததற்கு அது தான் காரணம். அப்படிப் பார்த்திருந்தால் உடனே அந்த முதலாளிகளுக்கு 'நியூஸ்' போயிடும். உஷாராயிடுவாங்களே! அதுக்காகத்தான் அஞ்சு பேரையும் சேர்த்து ஒரேடியா வலையிலே சிக்க வச்சிருக்காங்க. இந்த ஏற்பாட்டின் பின்னணியிலே ஒரு 'ஃபர்ஸ்ட் கிளாஸ் ப்ரெயின்' வேலை செஞ்சிருக்குது" என்றான் கௌதம்.

"இப்ப நீங்க என்ன நினைக்கிறீங்க? அதைச் சொல்லுங்க" என்றாள் நாற்பது வயதுக்காரி.

"இந்தக் கொலையை யாரோ ஒரு பெண்தான் செஞ்சிருக்கணும்னு தான் நினைக்கிறேன்!"

"ஏன் அப்படி நினைக்கிறீங்க?"

"கிஜிமாவின் அறைக் கதவு அன்று திறந்து கிடந்தது. ஆம்பிளைங்க யாரும் போய்க் கதவைத் தட்டியிருந்தால்

கிஜிமா கதவைத் திறந்திருக்கவே மாட்டாள். பொம்பிளை குரல் கேட்டுத்தான் திறந்திருக்காங்க. இரண்டாவது அந்த கர்ச்சிப் ஆம்பளைங்க எப்பவும் கையிலே 'கர்ச்சிப்' வெச்சிருக்க மாட்டாங்க. தேவையான போதுதான் அதை பாக்கெட்டிலிருந்து எடுப்பாங்க. கிஜிமா ஜன்னல் ஓரம் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் போததான் அவங்களை யாரோ கீழே தள்ளிவிட்டிருக்காங்க. கிஜிமா, அப்படித் தள்ளினவங்களையே ஆதாரமா பிடிச்சுக்கிட்டு தப்பப் பார்த்திருக்கலாம், அப்ப அந்த கர்ச்சிப் கிஜிமா கையிலே சிக்கியிருக்கலாம். இதுதான் என் யூகம்."

"ஏன்? ஏதாவது காதல் விவகாரமா இருந்திருக்கக் கூடாதா? ஆம்பிளைங்க உள்ளே போயிருக்கக் கூடாதா?" என்று கேட்டாள் நாற்பது வயதுக்காரி.

"அப்ப என்னைக் குற்றவாளி என்கிறீர்களா? நம்ம நாலு பேர்ல நான் தானே ஆம்பளை?" என்றார் ஐம்பது வயதுக்காரர்.

"ஏன் நான் கூடத்தான்" என்றான் மாணவன்.

"உனக்கு வயசு கம்மி! யாராயிருந்தாலும் அன்று ஓட்டலுக்குள் தங்கியிருந்தவர்களில் ஒருவர்தான் இந்தக் கொலையைச் செய்திருக்க வேண்டும்" என்றான் கௌதம்.

நாலு பேரும் "நான் இல்லை. நான் இல்லை" என்றார்கள்.

"சரி, அப்படின்னா நீங்க எல்லோரும் புறப்படலாமே!" என்றான் கௌதம்.

நாலு பேரும் வெளியே போக எழுந்தார்கள்.

"கைக்குட்டை வைத்திருந்தால் அதை என்னிடம் கொடுத்துட்டுப் போங்க" என்றார் கௌதம் அவர்களைப் பார்த்து.

"ஓ, தாராளமாத் தரோம். எடுத்துட்டு போங்க" என்றார்கள். ஐம்பது வயதுக்காரர் மட்டும் சற்று தயங்கினார்.

"நமக்கு இன்விடேஷன் வந்ததிலிருந்து இங்கு நடந்த சமாசாரம் பூராவையும் போலீஸ்ல போய் சொல்லி விடப் போறேன். நமக்கென்ன பயம்? அதுக்காகத்தான் எல்லார் கைக்குட்டைகளையும் வாங்கிட்டுப் போறேன். தயவு செய்து எல்லாரும் அவங்கவங்க கர்ச்சிப் மேலே ஒரு கையெழுத்துப் போட்டுக் கொடுத்துடுங்க" என்றான் கௌதம்.

"சரி; புறப்படுவதற்கு முந்தி எல்லாரும் ஒரு ஐஸ்கிரீம் சாப்பிடலாமே" என்றாள் இருபது வயதுப் பெண்.

"அது நல்ல ஐடியா! சாப்பிடுவோம்" என்றனர் மற்றவர்கள்.

ஐஸ்கிரீம் சாப்பிட்டு முடித்து, டாக்ஸி பிடித்து வீடு போய்ச் சேர்ந்த போது கௌதம் வீட்டு டெலிபோன் ஒலித்தது. ரிஸீவரை எடுத்துப் பேசினான்.

போலீஸ் குரல்!

"யார், கௌதமா? இப்ப உங்க வீட்டுக்கு போலீஸ் வான் வந்து கிட்டிருக்கு. நீங்க இங்கே வந்துட்டுப்போக முடியுமா?"

"ஓ!" வாசலில் எட்டிப் பார்த்தான். வான் வந்து நின்றது.

"வா, கௌதம்! அந்த நாலு பேரும் 'நாங்க குற்றவாளி இல்லே' ன்னு சொல்லிட்டாங்க. இல்லையா? அப்படின்னு குற்றவாளி நீங்கதான்!" என்று சிரித்தார் இன்ஸ்பெக்டர்.

"ஓகோ! இது உங்க வேலைதானா? போலீஸின் புனை பெயர்தான் கடலா? அங்கே. எங்களோடு கூடவே இருந்து பார்த்த மாதிரி சொல்றீங்களே! அப்ப எங்க பேச்சை யெல்லாம் 'பக்' பண்ணியிருக்கீங்கன்னு சொல்லுங்க. அதுசரி. எனக்கு எதுக்கு அழைப்பு அனுப்பிச்சீங்க? நான் அன்று ராத்திரி அந்த ஓட்டலில் தங்கவே இல்லையே!" என்றான் கௌதம்.

"அதனுலென்ன?" இன்ஸ்பெக்டர் குறும்பாய்ச் சிரித்து விட்டு, "உங்களை வெச்சுத்தான் இந்தக் கேஸைக் கண்டு பிடிக்கப் போறேம். உங்களுக்கும் சேர்த்து இன்விடேஷன் போட்டது அதுக்காகத்தான். உட்காருங்க. நடந்ததை விவரமாச் சொல்லுங்க" என்ருர்.

"எனக்கு அவர்கள் மீது துளிக்கூட சந்தேகம் வரலே. எதுக்கும் அவங்க நாலு பேர் கைக்குட்டைகளையும் கேட்டு வாங்கி வந்திருக்கிறேன். எல்லோருடைய கர்ச்சிப் மேலயும் அவங்கவங்க கையெழுத்துப் போட்டு கொடுத்திருக் காங்க. இதை வெச்சிட்டு ஏதாவது கண்டு பிடிக்க முடியுதான்னு பாருங்க."

இன்ஸ்பெக்டர் கைக்குட்டைகளை வாங்கிப் பார்த்தார். ஆச்சரியப் பட்டார். உதவியாளரை அழைத்து, "கிஜிமா கையில் அன்று சிக்கியிருந்த கைக்குட்டை, கோபால் அறையில் கிடந்த கைக்குட்டை இரண்டையும் கொண்டு வாங்க" என்ருர். அந்த இரண்டு கைக்குட்டைகள் வந்ததும் அவற்ருேடு கௌதம் கொடுத்தவற்றை வைத்து ஒப்பிட்டுப் பார்த்தார்.

அதே துணி, அதே அளவு. அதே கலர். அதே எம்ப்ராய்டரி நூலில் போட்டிருந்த இனிஷியல்கள்! கொஞ்சம் கூட வித்தியாசமே இல்லாமல் அவற்றில் ஒரு கைக்குட்டை இருந்தது. அதைப் பார்த்தபோது இன்ஸ்பெக்டரின் கண்கள் வியப்பால் விரிந்தன.

"பார்த்தீங்களா, கௌதம்! கிட்டத் தட்ட கேஸைக் கண்டு பிடிச்ச மாதிரிதான்!" என்று உற்சாகக் குரலில் சந்தோஷத்தை வெளிப்படுத்திஞர் இன்ஸ்பெக்டர். இரண்டு உள்ளங்கைகளையும் உரசித் தேய்த்தார். சந்தோஷம் வரும்போதெல்லாம் அவர் இப்படித் தேய்ப்பதுண்டு.

"இது, அந்த ஐம்பது வயதுக்காரன் கொடுத்த கைக்குட்டை! அவனு கிஜிமாவைக் கொலை செய்திருப்பான்? அதனுல்தான் அப்படித் தயங்கினுனே?" என்ருன் கௌதம்.

டெலிபோன் மணி ஒலிக்கவே, இன்ஸ்பெக்டர் 'ஹலோ' என்று கேட்க, "இன்ஸ்பெக்டர் ஸார்! அயாகோ பேசறேன். ஏதாவது துப்பு கிடைச்சுதா? கோபால் எப்படி இருக்கிறார்? அவரை நான் வந்துபார்க்கலாமா?"

"தாராளமாகப் பார்க்கலாம். நானே உங்களைக் கூப்பிடலாம்னு இருந்தேன். கோபால்கூட உங்களைப் பார்க்கணும்னு இப்பத்தான் சொல்லிக் கொண்டிருந்தார்."

"'கடல்' அழைப்புக்கு ஏதாவது பலன் கிடைச்சுதா?"

"கிடைச்சிருக்கு."

"காயா? பழமா? சீக்கிரம் சொல்லுங்க சார்!" என்று துடித்தாள் அயாகோ.

"கவலைப்படாதீங்க. சீக்கிரத்திலே பழுத்துடும்" என்றார் இன்ஸ்பெக்டர்.

உத்தேசமாக ஓர் அளவில் கோபாலுக்காக வாங்கி வைத்திருந்த ரெடிமேட் ஸூட்டை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள் அயாகோ.

# 9

அயாகோ கொடுத்த உடையை அணிந்து கொண்டு அவள் எதிரில் வந்து நின்ற கோபால் "ரொம்பக் கச்சிதமா இருக்கே! 'க்ரே கலர்' எனக்குப் பிடிக்கும் என்று உனக்கு எப்படித் தெரிந்தது?" என்று வியந்தான்.

"உங்கள் நிறத்தில். உங்கள் உயரத்தில். உங்களைப் போலவே ஒருவரைப் பார்த்தேன். அவர் 'க்ரே கல'ரில் ஸூட் அணிந்திருந்தார். ரொம்ப நன்றாயிருந்தது. உங்களுக்கும் அம்மாதிரி ஒரு ஸூட் வாங்க ஆசைப்பட்டேன்." முகம் சிவக்கச் சொன்னாள்.

"தாங்க்ஸ்! என் மீது நீ இவ்வளவு அன்பு காட்டுவாய் என்று நான் எதிர் பார்க்கவேயில்லை."

"ஏன்?"

"உன் தாயின் மரணத்துக்கு நான் தானே காரணம்?"

"நீங்கள் அவரைக் கொல்லவில்லையே."

"அன்று அந்தத் தீவை நான் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தானே கிஜிமா என்னை அழைத்துச் சென்றார். அங்கே தானே கொல்லப்பட்டார்?"

"கோபால்! நீங்க என்னை விரும்புகிறீர்கள் என்று எனக்குத் தெரியும். அதனால் தான் திரும்பத் திரும்ப எனக்குப் போன் செய்து கொண்டே இருந்தீர்கள். அன்றிரவு ஓட்டலில் தீ விபத்து நேர்ந்தபோது கூட முதலில் என்னைத் தேடிதான் ஓடி வந்தீங்க! பாவம், உங்கள் நிலைமை!" என்றாள்.

"உன் நிலைமையும் கூடத்தான்" என்று அவள் கைகளை எடுத்துத் தன் கைகளில் மூடிக் கொண்டான். அயாகோவின் குளிர்ச்சியான கைகளுக்கு அது இதமாயிருந்தது.

"எங்கே இந்தியா! எங்கே அமெரிக்கா! எங்கே ஜப்பான்! எங்கிருந்தோ இங்கே வந்து போலீசில் மாட்டிக் கொண்டிருக்கிறேன். இந்த ஜப்பான் பெண்ணுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? எனக்காக டிரெஸ் வாங்கிக் கொண்டு வந்து கொடுக்கிறாள். எனக்காகப் பரிதாபப் படுகிறாள். இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?"

"கோபால்! உங்கள் டிப்கோ நிறுவனத்தார் உங்களைத் தேடமாட்டாங்களா? நீங்கள் போலீசில் சிக்கியிருப்பது அவர்களுக்குத் தெரியுமா?"

"கோபாலைக் காட்டிலும் அவர்களுக்கு ஆயில்தான் முக்கியம். நான் போலீசில் மாட்டிக் கொண்டு விட்டேன் என்று தெரிந்தால் என்னை 'அப்போ' என்று விட்டாலும் விட்டு விடுவார்கள். நான் ஒரு இந்தியன். இங்கே ஏதாவது

சிக்கலில் மாட்டிக் கொள்வதாக இருந்தால் அப்படி மாட்டிக் கொள்பவன் ஒரு அமெரிக்கனாயில்லாமல் இந்தியனாக இருந்துட்டுப் போகட்டுமே என்று கூட நினைத்திருப்பார்கள். பொல்லாதவர்கள்.''

''ஆயில் பற்றி நிறைய ஆராய்ச்சி செய்திருக்கிறீர்களா?''

''எனக்கு 'ஆயில்' பற்றி அதிகம் தெரியாது. ஆயில்யம் பற்றித் தெரியும். அது தான் என் நட்சத்திரம்'' என்றான் கோபால்.

''ஆயில்யமா?''

''அதுதான் என் ஸ்டார். அதிர்ஷ்டம் இல்லாத ஸ்டார்!''

''உங்களுக்கு அதிருஷ்டமெல்லாம் இனிமேத்தான்'' என்று அர்த்தத்தோடு சிரித்துக் கண் சிமிட்டினாள் அயாகோ.

''உங்க இரண்டு பேரையும் இன்ஸ்பெக்டர் கூப்பிடுகிறார்'' என்று ஒரு போலீஸ் ஆள் வந்து அழைத்தான்.

இன்ஸ்பெக்டர் அறைக்குள் அவர்கள் நுழைந்தபோது அங்கு கௌதம் உட்கார்ந்திருந்தான். இன்ஸ்பெக்டர் கௌதமைக் காட்டி ''கோபால்! நான் சொன்னேனே, அந்த கௌதம் இவர்தான். பத்திரிகை நிருபர். 'கடல்' அழைப்புக் கடிதம் ஒன்று இவருக்கும் அனுப்பியிருந்தோம். இவர் பத்திரிகைக்காரர் மட்டுமல்ல. துப்பறிவதிலும் கெட்டிக்காரர்.''

கோபால் கௌதமைப் பார்த்து சிநேகமாய்ச் சிரித்தான்.

''நம்ம அதிர்ஷடம் பாருங்க! கௌதம் இனிஷியலும் 'எஸ். கே' வா அமைஞ்சு இருக்கு. கடற்கரை ஓட்டலுக்கு இவரை அனுப்பியது ரொம்ப நல்லதாப் போச்சு. இல்லேன்னா நம்ம திட்டமே பிசுபிசுத்துப் போயிருக்கும்?''

''அப்படியா?''

"ஆமாம் அவங்க நாலு பேரும் மட்டும் அந்த கடற்கரை ஓட்டலுக்குப் போயிருப்பாங்க. ஒருத்தர் முகத்தை ஒருத்தர் பார்த்துக்கிட்டு 'உம்', மென்று உட்கார்ந்திருப்பாங்க. கடைசிவரை ஒருத்தருக்கொருத்தர் பேசியிருக்க மாட்டாங்க. கொஞ்ச நேரம் ஆனதும் எதுக்கு வந்தோம்னு தெரியாமல், ஒண்ணும் புரியாமல், அவங்கவங்க பாட்டுக்கு எழுந்து போயிருப்பாங்க..."

"இவர் என்ன செய்தார்?"

"ஒவ்வொருத்தரிடமும் பேச்சுக் கொடுத்து, எதுக்கு கூப்பிட்டிருப்பாங்கன்னு இவராகவே அவங்களிடம் கேள்வி கேட்டு இனிஷியல் பற்றி ஞாபகப்படுத்தி, கிஜிமா கொலை பற்றிப் பிரஸ்தாபித்தது கடைசியா நாலு பேரிடமும் கர்ச்சிப் கேட்டு வாங்கிட்டு வந்துட்டாரே!"

"கௌதம்! பிரமாதமா வேலை செஞ்சிருக்கீங்க?" என்று கௌதமின் கையைக் குலுக்கிப் பாராட்டினன் கோபால்.

இன்ஸ்பெக்டர் பக்கம் திரும்பி "பார்த்தீங்களா?" முதல்ல என்னை அனுப்பறதாச் சொன்னீங்களே. நான் போயிருந்தால் இதெல்லாம் நடந்திருக்குமா? எதிரிகளுக்குத் தகவல் தெரிஞ்சு போயிருக்கும். உஷாராயிடுவாங்க! என்னை நீங்க வெளியே விடாதவரை நம் எதிரிகளுக்குச் சந்தேகம் வராது. போலீஸார் கோபாலைத்தான் குற்றவாளியா நினைத்து அவனை உள்ளே வைத்திருக்கிறார்கள் என்று எண்ணிக்கிட்டு இருப்பாங்க. அது நமக்கு நல்லதாச்சே!" என்றான் கோபால.

"யு ஆர் ரைட்" கோபால்! 'ராங் க்ளு மெதட்' ல வேலை செய்யறதுக்கு இது ரொம்ப உதவியாயிருக்கும்" என்றார், இன்ஸ்பெக்டர்.

"சரி, கௌதம் கொண்டு வந்த கர்ச்சிப்ல ஏதாவது....?"

"ஒரே ஒரு கர்ச்சிப் கிஜிமா கையிலிருந்த கர்ச்சிப் மாதிரியே இருக்குது."

"அது யாருடையது?"

"இத பாருங்க. அந்த ஆள் எப்படி இருப்பார்னு இதோ ஒரு படமே வரைஞ்சு காட்டிட்டார், கௌதம்!" என்று படத்தை கோபாலிடம் காட்டிய இன்ஸ்பெக்டர் "இந்த ஆளை நீங்க எங்கயாவது பார்த்த ஞாபகம் இருக்குதா?" என்று கேட்டார்.

கோபல் நெற்றியைத் தேய்த்துக் கொண்டான். சற்று யோசித்தான்.

"அ! இவனை அன்று அந்த ஒட்டல்ல பார்த்த ஞாபகம் இருக்குது. ஆமாம். இவனே தான்!" என்றான்.

"வெரிகுட்! இனிமேல்தான் நாம் வேலை செய்யணும். இப்ப இந்த கர்ச்சிப் யாருடையது என்று தெரிந்து போச்சு. யோகஹாமாவிலிருந்து வந்திருந்தானே அந்த ஐம்பது வயதுக்காரன்! கம்பெனி எக்ஸிகியூட்டிவ்னு சொல்லிக்கிட்டு அவனுடையதுதான் இது. அந்த ஆசாமி அட்ரஸும் இருக்குது. ரொம்ப நெருக்கத்திலே வந்துட்டோம்" என்றார் இன்ஸ்பெக்டர்.

"இன்றே யோகஹாமா போய் அந்த ஆசாமிக்குத் தெரியாமல் அவன் போகிற இடத்துக்கெல்லாம் அவனைத் தொடர்ந்து போய்ப் பார்த்துடணும். அப்ப தெரிஞ்சுடும் எல்லாம்" என்றான் கௌதம்.

"எஸ்! நானே இப்போதே 'மப்டி' யிலே புறப்படுகிறேன்" என்று கூறிய இன்ஸ்பெக்டர் அந்த ஐம்பது வயதுக்காரனுடைய விலாசத்தையும் கௌதம் வரைந்து கொடுத்த படத்தையும் எடுத்துப் பத்திரப்படுத்திக் கொண்டார். தம் டொயாட்டோவிலிருந்த போலீஸ் ஆபரணங்களைக் கழற்றி விட்டு, யோகஹாமா நோக்கி நீண்ட தூரம் பயணம் செய்து, அந்த ஆசாமி குடியிருந்த வீட்டுக்கருகில் கபூகி தியேட்டர் வாசலில் கொண்டு நிறுத்தினார்.

மணி ஆறுக்கு மேல் ஆகியிருந்ததால் தெருவில் ஆபீஸ் விட்டுப் போகிறவர்கள் நடமாட்டம் அதிகமாயிருந்தது. அந்த எக்ஸிகியூட்டிவ் ஒரு சந்திலிருந்து வெளிப்பட்டான். கௌதம் வரைந்து கொடுத்த உருவத்தைப் போலவே இருந்தான். அடர்ந்த புருவம். பீர் தொந்தி. தொந்தியைக் கீழே சரியாமல் நிறுத்திய பெல்ட். அவன் ஒரு டாக்ஸியை அழைத்து ஏறிக் கொண்டு விர்ரெனப் பாய்ந்தான். அந்த டாக்ஸி சபூகி தியேட்டரைக் கடந்து கிழக்குப் பக்கம் திரும்பியது. இன்ஸ்பெக்டர் அவனைப் பின் தொடர்ந்தார். டாக்ஸி ஒரு பிரிட்ஜுக்கடியில் புகுந்து உடனடியாக இடது பக்கம் திருப்பி ஒரு பார் வாசலில் போய் நின்றது. அந்த எக்ஸிக்யூடிவ் இறங்கி உள்ளே போனான். மூலையாக ஒரு நாற்காலி பிடித்து உட்கார்ந்து கொண்டு 'ஸண்ட்டோரி. விஸ்கி கொண்டு வரச் சொன்னான்.

இன்ஸ்பெக்டர் மெதுவாக நடந்து பாருக்குள் சென்றவர் நாற்காலிகள் நிரம்பியிருப்பதைக் கண்டார். ஸர்விஸ் கௌண்ட்டரில் போய் சாய்ந்து நின்று சூழ் நிலையை ஒரு முறை கண்ணோட்டமிட்டார். காலண்டர் கன்னியின் நிர்வாணத்தை இலவசமாய் ரசித்தார். ஒரு பீர் வாங்கி வைத்துக் கொண்டு அவ்வப்போது அந்த ஆசாமியைத் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தார். அவன் தன் பக்கத்திலிருந்தவனிடம் ஏதோ ஜோக் அடித்துப் பெரிதாகச் சிரித்துக் கொண்டிருந்தான்.

“இந்த ஆள் கொலை செய்திருப்பானா? இப்படி வெகுளியாய் சிரிக்கிறானே?” என்று சம்சயித்தார்.

ஸண்ட்டோரி குடித்துக் கொண்டிருந்த அவன் சட்டென்று பாதியில் எழுந்து வெளியே கிளம்பி விட்டான். ஒருவேளை தான் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் என்பதைத் தெரிந்து கொண்டு நழுவுகிறானோ?

வேகமாய் நடந்து தெரு முனையிலிருந்த இன்னொரு பாருக்குள் அவசரமாய்ப் புகுந்து விட்டான். இன்ஸ்

பெக்டரும் அதே வேகத்தில் அவனைத் தொடர்ந்து உள்ளே நுழைந்தார். அங்கிருந்தவர்கள் எல்லோரும் அவனுக்கு ஸலாம் போட்டுக் கொண்டிருந்தார்கள். 'ஹலோ பாஸ்' என்று சகஜமாய்ப் பழகினார்கள்.

"இவன் ஏன் பார் பாராக மாறிக் கொண்டிருக்கிறான்? எல்லா பாரிலும் இவனுக்கு 'ஸலாம்' அடிக்கிறார்களே. அவ்வளவு பெரிய ஆளா?"

மூன்றாவது பாருக்கு அவன் போன போதும் இன்ஸ்பெக்டர் அவனை விடவில்லை. தொடர்ந்து போய் அவன் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டார். இது அவனுக்குச் சற்று ஆச்சரியமாயிருந்தது.

"என்னையே தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறீர்களே, என்ன விஷயம்?" என்று அவன் சிரித்துக் கொண்டே கேட்டபோது இன்ஸ்பெக்டர் பதில் சொல்லத் திணறினார்.

சற்று தயங்கிவிட்டு "உங்கள் போக்கு எனக்கு வியப்பாயிருக்கிறது. எதற்கு இப்படி ஒவ்வொரு பாராகப் போய்க் கொண்டிருக்கிறீர்கள்?" என்றார்.

"அதுவா?" என்று சிரித்து விட்டு "இந்தப் பகுதியில் மொத்தமே ஏழெட்டு பார்கள்தான் இருக்கின்றன. எல்லா பார் முதலாளிகளும் எனக்குத் தெரிந்தவர்கள். எல்லோருக்கும் பிஸினஸ் கொடுக்கலாம் என்றுதான்" என்றான்.

"உங்களிடம் இன்னொரு கேள்வி கேட்கலாமா?"

"என்ன கேட்கப் போகிறீர்கள்?"

"இதோ இந்த கர்ச்சிப் உங்களுடையது தானே?" அவனுடைய கைக்குட்டையை எடுத்துக் காட்டினார்.

"ஆமாம். இது உங்களிடம் எப்படி வந்தது?"

"உண்மையைச் சொல்லுங்கள் கிஜிமாவைக் கொன்றது நீங்கதானே?"

"கிஜிமாவா? யார் அது?"

"கொஞ்சம் என் கூட வருகிறீர்களா?கார்ல ஏறிக்குங்க. போகும்போது எல்லாம் சொல்கிறேன்" என்றார்.

"உங்கள் காரில் நான் ஏறுமுன் நீங்க யார் என்பது தெரிய வேண்டும்?"

தமது அடையாளக் கார்டை எடுத்துக் காட்டினார் இன்ஸ்பெக்டர்.

அதைக் கண்டதும் அந்த ஆசாமி வாயடைத்துப் போனான். பதில் ஏதும் பேசாமல் பூனை மாதிரி போய்க் காரில் ஏறிக் கொண்டான்.

# 10

இன்ஸ்பெக்டர் வரவை எதிர் நோக்கி ஜன்னலருகில் உட்கார்ந்த கௌதம், சிகரெட் பற்ற வைத்துக் கொண்டு வாசலில் வேடிக்கை பார்த்தான். டேபிள் டிஜிடலில் மணி 10:46:21 மினுக்.... இன்ஸ்பெக்டர் வரும்போது 11:00 காட்டும்!

ஸப்வே புற்றுக்கருகில் மனித எறும்புகள், தெருவில் கிமாேனா முதுகுடன் சில பெண்மணிகள். குப்பைக் காவடியுடன் ஒரு கிழவன், மூவண்ண டாக்ஸியிலிருந்து இறங்கும் வெளி நாட்டுக்காரர், பத்திரிகை விற்கும் பெண், அதோ டொயாடோவில் இன்ஸ்பெக்டர்...

"ரொம்ப நேரமாக் காத்திருக்கீங்களா, கௌதம்?"

"இல்லே; போன காரியம் என்ன ஆச்சு? அந்த கர்ச்சிப் ஆளைப் பார்த்தீங்களா? என்ன சொல்றான்? முழிக்கிறானா?" சிகரெட் நெருப்பை ஆஷ்ட்ரேயில் அழுத்தினான்.

"முழிக்கிறானா? அந்த ஊரே அவனுக்கு ஸலாம் போடுதய்யா! பெரிய ஆளாயிருப்பான் போலிருக்கு. அரைமணிக்கு ஒரு 'பார்' மாத்தறான்."

"கர்ச்சிப் காட்டினீங்களா?"

"பார்த்தான். ஓட்டல்ல தங்கினது உண்மை. ஆனால் கிஜிமா கொலை பற்றி அவனுக்கு ஒண்ணுமே தெரியாதாம்."

"அப்படின்னு கிஜிமா கைக்கு இவன் 'கர்ச்சிப்' எப்படிப் போச்சாம்?"

"ரியோன்னு ஒரு பெண் அந்த ஓட்டல்ல வேலை செய்றாளாம் அவளை இவனுக்கு ரொம்ப நாளாத் தெரியும் போலிருக்கு. கிஜிமா செத்துப் போனாளே அன்று போன் பண்ணி இவனை ஓட்டலுக்கு வரச்சொல்லியிருக்கா. ஐந்தாவது மாடியிலே அவளுக்கு ட்யூடி. அன்று ராத்திரி இவங்க ரெண்டு பேரும் ஒரே பெட்ல படுத்திருக்காங்க."

"இன்ஸ்பெக்டர் ஸார்! இப்ப புரிஞ்சுட்டுது. அந்தப் பெண்தான் இவன் 'கர்ச்சிப்'பை இவனுக்குத் தெரியாமல் எடுத்திட்டுப் போயிருக்கணும். கிஜியாவைக் கொல்லும் போது அந்த கைக் குட்டை இவளிடம் இருந்திருக்கணும்!"

"நானும் அப்படித்தான் நினைக்கிறேன்...." என்றார் இன்ஸ்பெக்டர்.

"அந்தப் பெண் பேர் என்ன சொன்னீங்க?"

"ரியோ!"

"எப்ப இவளாவே அந்த கர்ச்சிப் காரனை ஓட்டலுக்கு வரச் சொல்லி அழைச்சிருக்காளோ, அதிலிருந்தே தெரியலையா, முன் கூட்டியே ஏதோ 'ப்ளான்' இருந்திருக்கணும்னு!"

"யெஸ், யெஸ், எனக்குக்கூட அதான் தோணுது?" என்றார் இன்ஸ்பெக்டர்.

"அந்த ஐம்பது வயசுக்காரனை சும்மா விட்டுட்டீங்களா?"

"என்ன செய்வது? அவன் மேலே சந்தேகப்படுறாப்பல ஒண்ணும் தெரியலே. வீட்டுக்கு அழைச்சிட்டுப் போனேன்.

டீ கொடுத்தான். மூன்று கார், நாலு டெலிபோன், அரை டஜன் நாய். வீடு பூரா நிர்வாணச் சிலைங்க...''

''ஒய்ஃப் எத்தனை?'' என்று கேட்டுச் சிரித்தான் கௌதம்.

''நான் காரில் ஏறிய போது ஓடிவந்து ஒரு கர்ச்சிப்பை நீட்டினுன் அந்த ஆசாமி.... 'இது ஏது' என்றேன். 'உங்களுடையதான். டீ சாப்பிடும்போது மேஜையில் மறந்து வைத்து விட்டீர்கள்' என்று சொல்லிச் சிரித்தான். அதுக்கு என்ன அர்த்தம் கௌதம்?''

''இப்ப உங்க கர்ச்சிப் எப்படி என்னிடம் வந்ததோ, அந்த மாதிரி என் காச்சிப்பும் போயிருக்கலாமில்லையா என்பதுதான் அர்த்தம்!''

''இப்ப என்ன செய்யலாம்...?''

''அந்த ஓட்டல்லே வேலை செய்யற பெண்ணைப் பிடிச்சு ஒரு உலுக்கு உலுக்கிஞ, எல்லா ரகசியமும் உதிர்ந்துடும், நான் போய் உலுக்கட்டுமா?''

''நியூஸ் பரவிடும். உஷாராயிடுவாங்க.'' இன்ஸ்பெக்டர் எச்சரித்தார்.

''நான் பத்திரிகைக்காரன். போலீஸ்ஞ தான் நியூஸ் பரவும்.''

''அந்த ஓடடல் வேலைக்காரப் பெண் பெரிய கைகாரியா இருப்பாள் போலிருக்கு. ரொம்ப சாமர்த்தியமா விஷயத்தைக் கறக்கணும்.''

''ஓகே.''

கௌதம் தாமதிக்காமல் புறப்பட்டான். ஓகி ஐலண்ட் போய் கிஜிமா தங்கிய அந்த ஐந்தாவது மாடியில் இடம் பிடித்தான். ஓட்டல் சிப்பந்திகளிடம் சிநேகமாய் பேசி 'ரியோ' பற்றி விசாரித்தான்.

அவள் லீவில் போயிருப்பதாகச் சொன்ஞர்கள்.

ரிஸப்ஷன் டெஸ்க்குக்குப் போய் அங்கு நின்ற கிளார்க்கிடம் கேட்டான்.

அந்த கிளார்க் கௌதமை மானேஜரிடம் அழைத்துச் சென்றான்.

"ரியோ மீது போலீஸ் சந்தேகப்படுகிறது. நான் ரிப்போர்ட்டர். பெயர் கௌதம். அவளை நான் உடனே பார்க்க வேண்டும்."

"அவள் லீவில் போயிருக்கிறாள்."

"விலாசம் இருக்குமே!"

மானேஜர் இண்ட்டர்காமில் யாரிடமோ பேசி ரியோ விலாசம் கொண்டு வரச் சொன்னார். அதைப் பெற்றுக் கொண்ட கௌதம் "மீண்டும் அவசியப்படும்போது வருவேன். நான் வந்து போன செய்தி யாருக்கும் தெரிய வேண்டாம்" என்று அதிகாரம் கலந்த ஒரு மிடுக்கோடு எழுந்தான்.

"இன்ஸ்பெக்டர் ஸார்! அந்த வேலைக்காரப் பெண் ரியோ ஓட்டலில் இல்லை. லீவிலே போயிருக்காளாம்."

"அட்ரஸ் கிடைச்சுதா?"

"இந்தாங்க அட்ரஸ்! எனக்கென்னவோ இந்த அட்ரஸ்ல கூட அவள் இருப்பாளாங்கறது சந்தேகம்தான்!"

"அப்படியா நினைக்கறீங்க? இப்பவே போன் பண்ணிப் பார்த்துடுவோம்."

"கூடாது; தப்பித்து விடுவாள். நேர்ல போறதுதான் நல்லது" கௌதம் சுயிங்கம் மென்றபடி சொன்னான்.

"அவளுக்கு என்ன வயசிருக்குமாம்?"

"முப்பது முப்பத்தஞ்சு இருக்கும்னு சொன்னாங்க..."

"சரி, புறப்படுங்க," என்றார் இன்ஸ்பெக்டர்.

"ஒரு வேளை அந்த விலாசத்திலே அவள் இல்லேன்னா?" என்று கௌதம் இழுத்தான்.

"வேறு எங்கே இருப்பார்?" இன்ஸ்பெக்டர் புருவங்களை உயர்த்தி யோசித்து விட்டு "இப்பவே அந்த காச்சிப்காரனுக்கு போன் பண்ணி கேட்டுடலாம்." நம்பரைச் சுழற்றினார். அடுத்த முனையில் கர்ச்சிப் 'ஹலோ!' என்றது.

"ரியோ விலாசம் வெச்சிருக்கீங்களா?" என்று கேட்டார் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

"விலாசம் இல்லே. எப்பவோ ஒரு டெலிபோன் நம்பர் கொடுத்ததாக ஞாபகம். கொஞ்சம் இருங்க, தேடிப் பார்த்துச் சொல்கிறேன்." தேடி எடுத்து அந்த நம்பரைச் சொன்னான் கர்ச்சிப்.

கௌதம் எதிர்பார்த்தபடியே அந்தப் பெண் ஓட்டல்காரர்கள் கொடுத்த விலாசத்தில் இல்லை. கர்ச்சிப் ஆசாமி கொடுத்த நம்பருக்கு விலாசம் கண்டு பிடித்து, அங்கே போய்த் தேடியபோது அந்த இடம் லேசில் சிக்கவில்லை.

ஒரு ரெஸ்ட்டாரண்ட்டில் போய் விசாரித்தான். எதிரில் தெரிந்த வாய்க்கால் ஓரமாகவே நடந்து வலது பக்கம் திரும்பச் சொன்னார்கள். திரும்பியபோது சின்னதும் பெரிதுமாய்ச் சில வீடுகள் வரிசையில் நின்றன. ஒரு வீட்டின் முன் பெரிதாய்ச் சாரம் கட்டி போர்த்தி இருந்தார்கள். அதன் பக்கத்தில் சென்ற சந்து வழியில், நீளமாய் நடந்தான். மனித நடமாட்டமே இல்லாத சந்து. தூரத்தில் தச்சவேலை நடந்து கொண்டிருந்தது. மரத்தில் ஆணிகள் அடிக்கப்படுகிற சத்தம், ரம்பம் அறுக்கிற ஓசை, சற்று தூரத்தில் சுவர் மீது சாய்ந்து நின்ற ஒருவனிடம் விலாசத்தைக் காட்ட அவன் "இதோ இந்தப் படிகள் வழியாக ஏறிப் போங்கள்," என்றான்.

அந்தப் படிகளில் ஏறிப் போனபோது அது ஒரு மேம்பாலமாக மாறித் தெருவின் அடுத்த பக்கத்தில் கொண்டு விட்டது. ஏராளமான கார்கள் நின்ற இடத்தில் நேவல் மியூசியம் தெரிந்தது. அங்கேதான் அவள் வீடு இருந்தது.

கௌதம் நிதானித்தான். அந்த வீட்டுக்கு எதிரில் போய் நின்று கர்ச்சிப் கொடுத்த விலாசம்தானு என்று நிச்சயப்படுத்திக் கொண்டான். பொது டெலிபோனில் இன்ஸ்பெக்டருடன் தொடர்பு கொண்டு "விலாசம் கண்டு பிடித்து விட்டேன். உடனே புறப்பட்டு வாருங்கள். நேவல் மியூசியத்துக்குப் பக்கத்தில்" என்று உற்சாகமாகக் கூறி அந்த இடத்தை அடைவதற்கான வழியையும் சொன்னுன்.

"கவலைப்படாதீங்க. இன்னும் இரண்டு பேருடன் பத்தே நிமிடங்களில் அங்கு இருப்பேன்" என்ருர் இன்ஸ்பெக்டர்.

"இங்கே பாலத்துக்குக் கீழே நேவல் மியூசியம் வாசலில் காரை நிறுத்தி விட்டு நான் போகும் வீட்டைக் கண் காணியுங்கள். அது வரை நான் இங்கேயே நிற்கிறேன்" என்ருன் கௌதம்.

இன்ஸ்பெக்டர் பத்தே நிமிடத்தில் வந்து விட்டார்.

கௌதம் அவர் வரும் வரை காத்திருந்து, கைகளால் சைகை காட்டிய பின், அந்த வீட்டு முன் போய் மணியை அழுத்தினுன். 'ஒரு அதிரடியில் அவளை மடக்கணும்.' ரியோ மாடியிலிருந்து இறங்கி வந்தாள்.

"யார் நீங்க?"

"கௌதம். ரிப்போர்ட்டர். உங்க பேர் தானே ரியோ?"

"ஆமாம்" சந்தேகமாய்ப் பார்த்து விட்டு, "மேலே வாங்க" என்ருள். அழகாயிருந்தாள்.

"என்ன சாப்பிட்றீங்க' டீ தரட்டுமா?"

"கொடுங்க."

"உங்களுக்கு அந்த கர்ச்சிப்காரரைத் தெரியுமா?" என்று திடுதிப்பென்று கேட்டான். அவளுக்கு வியர்த்தது.

"யார் அது?"

"இத பாருங்க. இந்தக் கர்ச்சிப் யாருடையதுன்னு உங்களால் சொல்ல முடியுமா?" அவள் வயிற்றில் ஒரு பெட்ரோல் தீ பரவியது.

சிரித்து பயத்தைச் சமாளித்தவளாய் அந்த கைக்குட்டையை வாங்கிப் பார்த்து ' தெரியுமே!'' என்ருள்.

''என்ன தெரியும்?''

''இவரை எனக்குத் தெரியும்?''

''எத்தனை வருஷமா?''

''பத்து வருஷமா?''

''கடைசியா இவரை எப்ப பார்த்தீங்க?''

''போன வருஷம் ஏதோ ஒரு எக்ஸிபிஷன்ல சந்திச்சேன். அவ்வளவுதான்.''

''அப்புறம் பார்க்கவேயில்லையா?''

''இல்லை''

''பொய்! கிஜிமாவைக் கொலை செய்தீங்களே, அன்று ஓட்டல்லே இவரோடு படுத்திருந்தீங்க.''

''நான் தனியா இருக்கறப்போ வந்து மிரட்டறீங்களா? போலீசுக்குப் போன் பண்ணட்டுமா?'' ரிஸீவர் போனருகில் சென்ருள்.

''வேண்டாம் அவங்களே இங்கே வந்திருக்காங்க. வெளியேதான் நிக்கறாங்க...''

அவள் கைகள் நடுங்கியதை கௌதம் கவனித்தான்.

''உண்மையைச் சொல்லிடுங்க. கிஜிமாவைக் கொலை செய்தது நீங்கதானே?'

''நான் இல்லை. அந்தக் கொலை பற்றி எனக்கு எதுவுமே தெரியாது....''

''நீ பொய் சொல்கிருய். உண்மையைச் சொல்லிடு. நடந்ததை மறைக்காமல் சொல்லிடு. அப்பதான் நீ தப்பலாம்!''

''இல்லேன்ஞ?''

''முதலில் லாக்கப்! அப்புறம் தண்டனை.''

அவள் வழிக்கு வந்தாள். ''சொல்லிடறேன். நான் தான் அவன் கர்ச்சிபைத் திருடினேன். ஓட்டலில் அவஞேடு படுத்திருந்தது உண்மைதான்: நான்தான் கிஜிமாவை...''

அப்போது 'பஸ்ஸர்' ஒலிக்கவே, "யாரோ கூப்பிடுறாங்க, இதோ வந்து விடுகிறேன்" என்று கூறிக் கீழே இறங்கிப் போனாள்.

சற்று நேரமாகியும் அவள் திரும்பி வராமல் போகவே கௌதம் சந்தேகத்துடன் எழுந்து போய்ப் பார்த்தான். அவள் படிக்கட்டுக்கு அருகில் குத்துயிராய்க் கீழே வீழ்ந்து கிடப்பதையும் மார்பிலிருந்து ரத்தம் பெருகுவதையும் கண்டு திடுக்கிட்டான். அவள் துடித்துக் கொண்டே "நான் தான் கிஜிமாவைக் கொன்றேன். அதோ என்னைச் சுட்டுவிட்டு ஓடுகிறானே, அவனைப் பிடியுங்கள், விட்டுடாதீங்க. கிஜிமாவைக் கொல்லச் சொன்னது அவன் தான்" என்றாள்.

ரியோவைச் சுட்டுவிட்டு வெளியே ஓடிக்கொண்டிருந்த அந்த ஆசாமியை அங்கு நின்ற இன்ஸ்பெக்டரும் அவரது ஆட்களும் மடக்கிப் பிடித்து, வானில் ஏற்றிக் கதவைச் சாத்தினார்கள்.

கௌதமுக்கு ஒரு நிமிடம் ஒன்றும் புரியவில்லை.

# 11

ஒரு வழியாக முரடனை மடக்கிப் பிடித்த மகிழ்ச்சியில் இன்ஸ்பெக்டர் 'டெம்பூரா' சாப்பிட்டுக் கொண்டிருந்தார். எதிரில் உட்கார்ந்திருந்த கோபாலைப் பார்த்து, "எப்படி ஒருத்தன் பிடிபட்டானே, இனி எல்லாரையும் மடக்கி விடலாம். தாங்க்ஸ் டு கௌதம்" என்றவர் சிகரெட் பற்ற வைத்துக்கொண்டு "என்னசாப்பிட்றே கோபால்?"

"உங்க முகத்திலே இன்றுதான் சிரிப்பைப் பார்க்கிறேன் ஸார்! ஐஸ்கிரீம் கொண்டு வரச் சொல்லுங்க." என்றான் கோபால்.

"பெரிய 'ஹெட் ஏக்' தீர்ந்தது. எங்க ஜப்பான் நாட்டுக்கே அவமானம். அதுவும் எங்க ப்ரிபெக்சர்லயே

இப்படி நடக்குதுன்னு! வர வர அமெரிக்கா மாதிரி ஆயிட்டுது இங்கயும்....''

''அந்தக் கொலைக்காரன் என்ன ஸார் சொல்கிறான்?''

''என்ன சொல்வான்க? கொடுக்கிறதைக் கொடுத்தா எல்லாம் வெளியே வந்துரும்.''

''அடிப்பீங்களா அவனை?''

''அடிக்க மாட்டோம். எத்தனையோ மெதட் இருக்கு ஒண்ணு ஒண்ணுப் பார்த்தப்புறம்... கடைசியா தேவைப் பட்டா....''

''அனாவசியமா என் மேலே சந்தேகப் பட்டீங்களே. இப்ப பார்த்தீங்களா?''

''ஸாரி கோபால்! இப்ப இந்த முரட்டுப் பசங்க எல்லோரையும் 'ரவுண்ட்' பண்ணியாகணுமே, அதுதான் கவலையா இருக்கு.''

''அந்த கிஜிமாவை ரியோங்கற பெண்தான் கொலை செய்திருக்கணும். இப்ப நல்லாத் தெரிஞ்சு போச்சு. இந்த ஆளுங்க தான் ரியோ மூலமா கிஜிமாவைக் கொன்னிருக்காங்க. கௌதம் ரியோ வீட்டுக்குள் போவதை அவங்க தூரத்திலிருந்து வாச் பண்ணியிருக்காங்க. உடனே அவர்களில் ஒருத்தன் போய் ரியோவை க்ளோஸ் பண்ணியிருக்கான்னு தான் எனக்குத் தோணுது.''

''கோபால்! அன்னைக்கு, கிஜிமா ஆஸ்பத்திரியிலே இருக்காங்கன்னு சொல்லி உங்களை ஏமாற்றி அவசரமாக் கடத்திட்டுப் போனாங்களே, அவன்களில் ஒருத்தனா யிருப்பானே இவன்? வாங்க போய்ப் பார்க்கலாம். 'லாக்கப்'ல தான் இருக்கான்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

கம்பிகளுக்குப் பின் உட்கார்ந்திருந்த முரடன் கோபாலைப் பார்த்ததும் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

''இவனை எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு ஸார்! இவனேதான். முகத்தில் இடது புருவத்துக்கு மேல ஒரு தழும்பு இருக்குதா, பாருங்க.''

கோபால் குறிப்பிட்ட இடத்தில் தழும்பு இருந்தது.

இன்ஸ்பெக்டர் முரடனைப் பார்த்து ஜப்பான் மொழியில் கேட்டார் "இவரைப் பார்த்திருக்கயா?"

"இல்லை."

"இவன் பொய் சொல்கிறன் ஸார்!" என்றுன் கோபால்.

"பொதுவாக ஜப்பானியர்கள் பொய் சொல்வதில்லை." என்று சப்பைக் கட்டு கட்டினர் இன்ஸ்பெக்டர். அவருக்கு நாட்டுப்பற்று அதிகம்.

"இப்ப என்ன செய்யப்போறீங்க, இன்ஸ்பெக்டர்?"

"இனி யோசித்துதான் நடவடிக்கையில் இறங்கணும். பெரிய புள்ளிகள் சிலர் இதில் மறைமுகமாக ஈடுபட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. முதலில் ஸூப்பரிண்ட்டிடம் பேசப் போகிறேன். அப்புறம்தான் மற்ற எல்லாம்."

டெலிபோன் மணி ஒலிக்க, இன்ஸ்பெக்டர் ரிஸீவரை எடுத்துக் காதில் வைத்தார்.

"ஹலோ! கௌதம் பேசுகிறேன். பேப்பர் பார்த்தீங்களா?" குரலில் பதற்றம் இருந்தது.

"என்ன விஷயம் கௌதம்? இன்னும் பார்க்கல..."

"ஓகி ஐலண்ட்ல ஆயில் எடுப்பது பற்றி கவர்ன்மெண்ட்ல முடிவு செய்யப் போறுங்களாம். அநேகமா அமெரிக்காவில் உள்ள வேறொரு ஆயில் கம்பெனிக்கு இந்த சான்ஸ் கிடைக்கும்னு தோணுது. நாளைக்கு காபினெட் மீட்டிங் இருக்காம்" என்றுன் கௌதம்.

"எந்த பேப்பர்ல போட்டிருக்காங்க?"

"யமூரிலாண்ட் முதல் பக்கத்தில பாருங்க...."

யமூரிலாண்ட் கொண்டு வரச்சொல்லி பார்த்தபோது கௌதம் சொன்ன செய்தி கொட்டை எழுத்துக்களில் இருந்தன.

"பார்த்தீங்களா? இண்டஸ்ட்ரீஸ் மினிஸ்டரை யாரோ நல்லா டாலர்ல குளிப்பாட்டியிருக்காங்க. இதை நான் சும்மா விடப்போறதில்லே!" என்றுன் கோபால்.

"அது கவர்ன்மெண்ட் சமாசாரம். நான் போலீஸ் ஆபீசர். நோ கமெண்ட்ஸ்!" என்றார் இன்ஸ்பெக்டர்.

"இண்டஸ்ரீட்ஸ் மினிஸ்டரை நான் சந்திச்சப்போ என்னிடம் தெளிவாச் சொன்னாரே. 'இத பாருங்க கோபால்! ஜப்பானுக்கு ஆயில் தேவை. இங்கே ஆயில் ரொம்பக் குறைச்சலாத்தான் இருக்குது. அதையும் எடுக்கலேன்னா நஷ்டம் இந்த நாட்டுக்குதான். ஆனால் ஆயில் எடுப்பதற்கு இந்த ஸகுரா பெரிய இடைஞ்சலாயிருக்குது. ஸகுரா ஒப்புக் கொண்டால் நான் உடனே பர்மிஷன் கொடுத்துடுவேன். எதுக்கும் நீங்க கிஜிமாவைப் பார்த்துப் பேசுங்களேன்' என்று என்னிடம் சொல்லி அனுப்பினாரே! இப்ப திடீர்னு ஏன் இப்படி பல்டி அடிக்கிறார்? சரிதான். இப்ப கிஜிமா இல்லே. நானும் போலீஸ்ல மாட்டிக்கிட்டேன்! அதனாலே இனி கேட்பார் இல்லேன்னு நினைச்சிருப்பார். எங்க கம்பெனிக்குப் போட்டியா அமெரிக்காவிலேருந்து பல கம்பெனிங்க போட்டி போடறாங்க. அவங்க என்ன வேணா செய்வாங்க. இந்த இண்டஸ்ட்ரீஸ் மினிஸ்டர் அவங்க வலையிலே சிக்கிட்டார்னுதான் நினைக்கிறேன்."

"நீங்க போய் அவரைப் பார்த்துப் பேசுங்களேன்..."

"பேசத்தான் போறேன். இப்ப எனக்கு ஆயில் கூட முக்கியமில்லே. அயாகோதான் முக்கியம். ஸகுரா இயக்கத்தை அந்த அயாகோ மூலம் முடுக்கி விட்டு இந்த நாட்டிலேருந்து யாருமே ஆயில் எடுக்க முடியாதபடி செய்யறா, இல்லையா பாருங்க."

"நான் சர்க்கார் உத்தியோகம் பார்க்கிறவன். என்னிடம் இதெல்லாம் சொல்லாதீங்க. உங்களை வேணா இப்பவே விடுதலை செய்துடறேன். நீங்க போகலாம். குட்பை!" என்று கை குலுக்கி அனுப்பினார் இன்ஸ்பெக்டர்.

கோபால், டாக்ஸி பிடித்து அயாகோவைத் தேடிச் சென்றபோது அவள் கடையில் இல்லை.

ஸகுரா ஆபீஸுக்குப் போயிருப்பதாகக் கடையில் உட்கார்ந்திருந்த கிழவி சொன்னாள்.

உடனே கௌதமுக்கு அவசரமாக டெலிபோன் செய்து "கௌதம்! இங்கு வர முடியுமா? ரொம்ப அவசரம்!" என்றான்.

"எங்கிருந்து பேசறீங்க?"

"அயாகோ கடையிலிருந்து...."

"நீங்க எப்படி அங்கே போனீங்க?"

"இன்ஸ்பெக்டர் என்னை விடுதலை செய்து அனுப்பி விட்டார். கொலைகார கும்பல்லே ஒருத்தனை பிடிச்சாச்சே! அதனாலே என்னை விட்டுட்டாங்க."

"பத்திரிகையில் இன்னொரு முக்கிய செய்தி வந்திருக்கே தெரியுமா?"

"இன்ஸ்பெக்டர் சொன்னார். ரொம்ப அநியாயம் இது. கவர்ன்மெண்ட்டோடு மோதிப் பார்த்துடணும். சும்மா விடக்கூடாது...."

"நீங்க என்ன செய்ய முடியும்? பெரிய பெரிய உள்ளூர் திமிங்கலங்கள் இந்த சர்க்காரைச் சுற்றிக் கொண்டிருக் கின்றன. நீங்க வெளி நாட்டிலிருந்து வந்திருக்கிற ஒரு குட்டி மீன்!"

"ஸதரா இயக்கம் கூட செத்துப் போயிட்டுதா, என்ன?"

"கிஜிமா போனப்புறம் அந்த இயக்கம் இனி எங்கே தலை தூக்கப்போகுது?"

"கௌதம்! ஏன் அப்படி நினைக்கிறீங்க? உங்க பலம் உங்களுக்குத் தெரியலே. நீங்க மனது வைத்தால் சர்க் காரை ஆட்டி வைக்கலாம்."

"நானா? நான் என்ன செய்ய முடியும், கோபால்!"

"ஸதரா இயக்கத்தை முடுக்கி விட்டு சர்க்காருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ய வைக்கலாம். ஸதரா ஊர்வலம் நடக்கப் போவதாக நாளைக்கே பத்திரிகையில ஒரு நியூஸ் போடலாம்."

"அது முடியாது, நான் பொய் நியூஸ் போட மாட்டேன்...."

"நிஜமாகவே கிளர்ச்சி நடத்தறதுக்கு ஏற்பாடு செய்துட்டா் நியூஸ் நிஜமாயிடுமே! ஸகுரா ஜெனரல் பாடியைக் கூட்டி கிஜிமாவுக்குப் பிறகு அயாகோவையே ஸகுரா தலைவியாகத் தேர்ந்தெடுக்கலாமே! நீங்களும் அதிலே ஒரு மெம்பர் தானே?"

"வெரி குட் ஐடியா! அப்புறம்?"

"முதல்லே ஊர்வலம் நடத்தறதுக்கு ஏற்பாடு செய்யுங்கள்."

"செய்துடுவோம். இப்ப என்ன செய்யலாம்?"

"நாம் இரண்டு பேரும் நாளைக்கே இண்டஸ்ட்ரீஸ் மினிஸ்டரைச் சந்திக்கணும். வேறு கம்பெனிக்கு உரிமை கொடுப்பது என்ன நியாயம்னு கேட்கணும். அப்ப என்ன பதில் சொல்றார்னு பார்க்கலாம்."

"காபினெட் டிஸிஷன் பாரு...."

"ஸகுரா அப்ஜெக்‌ஷன் இதுக்கு மட்டும் இல்லையான்னு கேட்கிறேன்..."

"ஸகுராவே இல்லையே! அப்புறம் அப்ஜெக்‌ஷன் ஏதுன்னு ஈஸியா பதில் சொல்லிடுவார்...."

"அதுக்குத்தான் ஸகுரா இயக்கம் கிளர்ச்சி நடத்தப் போவதாக ஒரு செய்தி நியூஸ் பேப்பர்ல வரணும்னு சொல்றேன்."

"சரி; நான் இப்ப ஸகுரா ஆபீஸுக்கு போன் பண்ணி நாம் இரண்டு பேரும் அங்கு வந்து கொண்டிருப்பதாக அயாகோவுக்குச் சொல்லி விடுகிறேன். உனக்கு வழி தெரியுமில்லையா?"

"ஓ! டய்ச்சி ஓட்டல் பக்கத்திலே தானே? இதோ டாக்ஸியில் வந்து விடுகிறேன்" என்று போனை வைத்தான் கோபால்.

# 12

உதவித் தலைவர் இஸாவா, ஸகுரா இயக்கத்தில் நீண்ட காலமாக இருந்து வருபவர், தொழிலமைச்சரின் நெருங்கிய நண்பர். கிஜிமா தலைவியாக இருந்த வரை செயலற்றுக் கிடந்தார். இப்போது அவரைத் தன் கைக்குள் போட்டுக் கொண்டு, அந்த இயக்கத்தையே ஒடுக்கி விட இரகசிய திட்டம் இட்டிருந்தார் தொழிலமைச்சர்.

அன்று மாலை ஸகுரா அலுவலகத்தில் பொதுக்குழு கூடியிருந்தது. முக்கியமான கூட்டமானதால் ஓரிருவரைத் தவிர அங்கத்தினர்கள் எல்லோருமே வந்திருந்தனர்.

1. தலைவி கிஜிமாவின் மறைவுக்கு அனுதாபம்.

2. புதிய தலைவர் தேர்தல்.

இந்த இரண்டு ஐட்டங்கள் மட்டுமே நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றிருந்தன.

தலைவரின் நடுநாயகமான ஆசனம் காலியாக இருந்தது. அதை நிரப்ப கிஜிமா இப்போது இல்லை.

அதற்கு வலது பக்கத்தில் உபதலைவர் இஸாவாவும் இடது பக்கத்தில் அயாகோவும் அமர்ந்திருந்தனர்.

கிஜிமாவின் பிரிவால் சபை களை இழந்து காணப்பட்டது.

பார்வையாளர்களுக்கென தனியாக ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் கோபால் தனியாக உட்கார்ந்து கொண்டான்.

இயக்கத்தின் செயற்குழு அங்கத்தினர் என்ற முறையில் கௌதமுக்கு முதல் வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. கௌதம் இரண்டு நிமிடங்களில் வந்து சேர்வதாக டெலிபோன் செய்திருந்தான். அவன் வந்ததும் பிரார்த்தனையுடன் கூட்டம் ஆரம்பமாயிற்று.

அடுத்து கிஜிமாவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் எல்லோரும் எழுந்து நின்று இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் உபதலைவர் இஸாவா எழுந்து பேசினார்:

"இந்த நாட்டின் சூழ்நிலைத் தூய்மை காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் கிஜிமா காட்டிய அக்கறையையும், ஸதுரா இயக்கத்தின் மூலம் அவர் ஆற்றிய பணிகளையும் வர்ணித்து விட்டு அன்னாரின் மறைவு ஈடு செய்ய முடியாத நஷ்டம்" என்றார்.

அடுத்தாற்போல் "இந்த நாட்டின் தூய்மைப் பாதுகாப்பில் தன் தாய் கிஜிமாவைப் போலவே மிகுந்த அக்கறை கொண்டுள்ளவர் மிஸ் அயாகோ. அவரே இந்த இயக்கத்தின் தலைமையை ஏற்று நடத்த வேண்டும்" என்று வாதாடினார் கௌதம்.

"உபதலைவர் இஸாவா அவர்களையே இந்த இயக்கத்தின் தலைமைப் பதவிக்கு நான் முன்மொழிகிறேன்" என்று இன்னொரு அங்கத்தினர் குறுக்கிட்டார்.

ஒருமனதான முடிவுக்கு வரமுடியாமற் போகவே இஸாவா, அயாகோ இருவருமே தேர்தலில் போட்டியிட வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போதே தேர்தல் நடத்தி வோட்டுக்களை எண்ணி முடிக்கும்போது மணி எட்டு. அதிக மான ஓட்டு வித்திவாசத்தில் அயாகோ வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்ட போது சபையில் பலத்த கரகோஷம் எழுந்தது.

கௌதமுக்கு உற்சாகம் தாங்கவில்லை. ஓடிச் சென்று கோபாலைக் கட்டிக் கொண்டு "கோபால்! இனி அந்தத் தொழில் அமைச்சரின் கொட்டத்தை அடக்கி விடலாம். இதை இஸாவாவின் தோல்வி என்று சொல்வதைக் காட்டிலும் தொழிலமைச்சரின் தோல்வி என்று தான் கூற வேண்டும்.

ஒகி ஐலாண்டில் இனி யாருமே எண்ணெய் எடுக்க முடியாது. மந்திரி சபையிலும் அதற்குச் சாதகமாக முடி

வெடுக்க முடியாது அயாகோ தலைவியாக உள்ளவரை ஸதுரா அதற்கு ஒரு நாளும் ஒப்பாது'' என்றான்.

''வேறு ஏதோ ஒரு அமெரிக்கக் கம்பெனிக்கு இந்த அரசு ஆயில் எடுக்கும் உரிமை வழங்கப் போவதாகப் பத்திரிகையில் செய்தி அடிப்பட்டதே!'' என்றான் கோபால்....

''அதெல்லாம் தொழிலமைச்சரின் பகல் கனவு. இப்போதே அயாகோவிடம் சொல்லி நாளை மாலையே மௌன ஊர்வலம் நடத்தி ஸதுராவின் எதிர்ப்பைக் காட்டிவிட ஏற்பாடு செய்கிறேன், பார்''! என்றான் கௌதம்.

மறுநாள் காலை யமூரிலாண்ட் பத்திரிகை உட்பட எல்லா நாளிதழ்களிலும் அந்தச் செய்தி வெளியாகியிருந்தது.

ஸதுரா இயக்கத் தலைவியாக அயாகோ தேர்ந்தெடுக்கப் பட்டார்!

ஒகி ஐலண்டில் எண்ணெய் எடுக்க எதிர்ப்பு!

நாளை மாலை அயாகோ தலைமையில் ஆயில் எடுப்பதை எதிர்த்து மௌன ஊர்வலமும், ஷிபுயா ஸ்டேஷன் வாசலில் நாய்ச் சிலைக்கு அருகே பொதுக் கூட்டமும் நடைபெறும்.

''கௌதம்! இந்தச் செய்தியை நீ பார்க்கவில்லையா?'' என்று நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையில் வெளியாகியிருந்த வேறொரு செய்தியை எடுத்துக் காட்டினான் கோபால்.

சிகாகோ இண்ட்டர்நேஷனல் பெட்ரோலியம் கம்பெனிக்கு ஒகி ஐலண்டில் ஆயில் எடுக்க உரிமை வழங்குவது பற்றி மந்திரி சபையில் ஆலோசனை!

இந்தக் கொட்டை எழுத்து செய்தியைக் கண்டு கௌதம் கொதித்தான்.

''இதென்ன புதுக்கரடி! இதை நாம் அனுமதிக்கக் கூடாது. மந்திரி சபையில் ஆலோசனை தானே நடத்துகிறார்கள்? முடிவு எடுத்து விடவில்லையே! நாளை பார்த்து விடலாம்'' என்றான் கௌதம்.

# 13

டோக்கியோ வீதிகளில் பொழுது விடிந்து கொண்டிருந்தது. ஒரு கம்பெனி வாசலில் கெடிகாரம் 6-40 காட்டியது. ஒரு ஜப்பானியக் கிழவன் கூன்முதுகில் கடை வாசலைப் பெருக்கிக் கொண்டிருந்தான்.

இன்ஸ்பெக்டர் இரண்டு உதவியாளர்களுடன் ரியோ வீட்டுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

நேவல் மியூஸியம் வாசலில், கௌதம் ஸிகரெட் குடித்தபடி இன்ஸ்பெக்டரை எதிர் பார்த்துக் காத்திருந்தான் குறித்த நேரத்தில் அங்கு வந்து சேர்ந்த இன்ஸ்பெக்டர் "கௌதம், ரெடியா வா, போகலாம்" என்று அழைத்தார்.

உதவியாளர்களில் ஒருவன் அந்த வீட்டு வாசலில் துப்பாக்கியுடன் காவல்புரிய பூட்டைத் திறந்து கொண்டு இருவரும் உள்ளே நுழைந்தார்கள். இன்னொரு உதவியாளன் இன்ஸ்பெக்டரை நிழல் போல் தொடர்ந்து, மாடிக்கு ஏறிச் சென்றான். பூனை ஒன்று குறுக்கே பாய்ந்து ஓடியது.

"ம்...ரியோ மட்டும் உயிரோடு இருந்தால் இதுக்குள்ளே பல ரகசியங்கள் வெளிப் பட்டிருக்கும். படுபாவி! அநியாயமா அவனைச் சுட்டுக் கொன்னுட்டானே!" பெருமூச்சு விட்டான் கௌதம்.

"கௌதம்! இந்த வீடு பூராவும் ஆளுக்கு ஒரு அறையில் புகுந்து சோதனை செய்து பார்த்துடுவோம்" என்றார் இன்ஸ்பெக்டர்.

கௌதம் ஒவ்வொரு அறையாகச் சென்று நோட்டம் விட்டான்.

இன்ஸ்பெக்டர் மேஜை டிராயர்களைத் திறந்து பார்த்தார். சாவிக் கொத்து ஒன்றும் சில காகிதத் துண்டுகளும் சிக்கின.

உதவியாளர் கிச்சன் அறையை ஆராய்ந்தார் சில ரொட்டிகள் காய்ந்து கிடந்தன.

திடீரென்று ''ஸார்!'' என்று கூவினன் கௌதம். இன்ஸ்பெக்டர் அவன் இருந்த அறைக்குள் போனபோது கௌதம் அங்கிருந்த டாலர் நோட்டுகளைக் காட்டி ''இதைப் பார்த்தீங்களா!'' என்றான் வியப்புடன்.

''எவ்வளவு பணம்?''

''எல்லாம் நூறு டாலர் நோட்டு, புத்தப் புதுசு... ஐம்பது நோட்டாவது இருக்கும்னு தோணுது. அமெரிக்கன் மணி ஏராளமா விளையாடியிருக்கணும்'' என்றான் கௌதம்.

''இதெல்லாம் எங்கே இருந்தது?''

''ஹாண்ட் பாக்ல, தலையணைக்கு அடியிலே....''

பாங்க்கில் வேறு இருக்குமோ?'' இன்ஸ்பெக்டர் சந்தேகப்பட்டார்.

''இருக்குமா என்ன? நிச்சயம் இருக்கும். இத பாருங்க செக் புக் கூட கிடைச்சிருக்கு. பாங்க் ஆப் அமெரிக்கா'' என்றான் கௌதம்.

''வெரிகுட்! பக்கத்திலேதான் பாங்க் இருக்கு. வா, முதல்லே அங்கே போய்ப் பார்த்துடுவோம்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

பாங்க்கில் அதிகக் கூட்டம் இல்லை. இப்போதுதான் மணி 7-55. இன்னும் ஐந்து நிமிடத்தில் சுறுசுறுப்பாகிவிடும். மானேஜர் அப்போதுதான் அறைக்குள் வந்து அமர்ந்து அன்றைய வேலைகளுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்.

ரிஸப்ஷனில் புன்சிரிப்புக் காட்டிய பெண்ணிடம் கௌதம் விஸிடிங் கார்ட் ஒன்றைக் கொடுத்து ''மானேஜரைப் பார்க்க வேண்டும்'' என்றான். சொல்லி விட்டு, கௌண்ட்டரிலிருந்த கன்னிகளை ரசித்துக் கொண்டிருக்கும்போதே ''மானேஜர் உங்களை வரச் சொல்கிறார்!'' என்று ஒருவர் வந்து அழைத்தார்.

"குட்மார்னிங்!" என்று கூறிக் கொண்டே மானேஜர் அறையில் நுழைந்த இன்ஸ்பெக்டர் "ரியோ என்ற பெயரில் உங்கள் பாங்க்கில் கணக்கு வைத்திருக்கும் பெண் பற்றிச் சில தகவல்கள் தெரிய வேண்டும்" என்றார்.

"ஓ! இரண்டு நாட்களுக்கு முன் சுட்டுக் கொல்லப் பட்டாரே, அந்த ரியோவா? அவரைப் பற்றி என்ன தகவல் வேண்டும்?"

"இந்த பாங்க்கில் அவர் எவ்வளவு பணம் வைத்திருக் கிறார். என்று தெரிய வேண்டும்."

"அக்கௌண்ட் நம்பர் தெரியுமா?"

"தெரியாது இந்த செக் புத்தகம் மட்டும் அவர் வீட்டில் கிடைத்தது. இதோ...."

மானேஜர் கம்ப்யூட்டரைத் தட்டி விசாரித்தபோது ரியோவின் பாங்க் ஜாதகம் முழுதும் கிடைத்து விட்டது.

"அவர் பெயரில் லாக்கர் ஏதாவது இருக்கிறதா?"

"எஸ். 366-ம் நம்பர் லாக்கர்" என்றது கம்ப்யூட்டர்.

"அதைத் திறந்து பார்க்க வேண்டுமே!" மானேஜரிடம் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"எங்களிடம் டூப்ளிகேட் கீ இருக்கிறது. வாருங்கள் போய்த் திறந்து பார்க்கலாம்" என்று இன்ஸ்பெக்டரையும் கௌதமையும் லாக்கர் அறைக்கு அழைத்துச் சென்றார் மானேஜர்.

366—ஐத் திறந்தபோது உள்ளே கற்றை கற்றையாய் டாலர் நோட்டுகள்!

மானேஜர் அந்த நோட்டுகளை வெளியே எடுத்துப் போட்ட போது, இடையில் ஒரு கடிதம் கிடைத்தது. ரியோவே தன் கைப்பட எழுதியிருந்தாள்.

"இந்தக் கடிதத்தை யார் படிக்க நேர்ந்தாலும், தயவு செய்து அவர்கள் இந்த லாக்கரிலுள்ள பணத்தையும், இந்தக் கடிதத்தையும் போலீஸில் சேர்த்துவிட வேண்டுகிறேன்.

நான் சில நாட்களுக்கு முன் ஓகி ஐலண்ட் ஓட்டலில் வேலை செய்து கொண்டிருந்தேன். ஐந்தாவது மாடியில் உள்ள அறைகளைச் சுத்தம் செய்வது, படுக்கை உறை, நைட்கவுன், டவல், க்ரீன் டீ, பிளாஸ்க்கில் சுடு தண்ணீர், ஆஷ்ட்ரே, இவ்வளவும் மாற்றி வைப்பதுதான் என் வேலை. எல்லா அறைகளையும் நான் எப்போது வேண்டுமானாலும் திறக்க முடியும். அவ்வளவு சாவிகளும் என்னிடம் இருந்தன.

அன்று, கிஜிமா தங்கியிருந்த 515-ம் நம்பர் அறைக் கதவைத் திறந்து அவளைக் கீழே தள்ளி கொலை செய்தது நான் தான். அப்போது எஸ். கே. என்ற எழுத்துக்களுடன் கூடிய 'கர்ச்சிப்' என்னிடம் இரண்டு இருந்தன. அதே மாடியில் வேறொரு அறையில் தங்கியிருந்தவரின் கைக்குட்டைகளை முதல் நாளிரவு அவருக்குத் தெரியாமல் எடுத்து வைத்துக் கொண்டேன்.

அந்த எஸ். கே.யுடன் எனக்கு நீண்ட காலமாக நட்பு உண்டு. அவர் பெயர் ஸுஜுரா கோஷிகாவா. அடிக்கடி அவருடன் ஓட்டலில் போய்த் தங்குவேன். அவரோடு சேர்ந்து படுப்பேன். உடலுறவு கொள்வேன். இதற்காக அவர் எனக்குப் பணம் தருவார். இடையில் ஒரு வருடமாய் அவருக்கும் எனக்கும் தொடர்பு விட்டுப் போயிருந்தது.

அந்த ஒரு வருடகாலம் நான் வெளியூர்களில் எங்கெங்கோ அலைந்து விட்டு மறுபடியும் டோக்கியோ வந்து சேர்ந்தேன். சில நாள் வேலை எதுவுமில்லாமல் இருந்தேன். சமீபத்தில்தான் ஓகி ஓட்டலில் வேலைக்குச் சேர்ந்தேன்.

அந்த ஓட்டலில் என்னை வேலைக்குச் சிபாரிசு செய்து சேர்த்து விட்டவர் என்னுடைய இன்னொரு காதலர். பெரும் பணக்காரர். திடீரென்று அவர் என்னை ஒருநாள் அவசரமாகச் சந்திக்க வேண்டுமென்று ஓட்டலுக்குப் போன் செய்து கூப்பிட்டார். ஒரு குறிப்பிட்ட இடத்தில் சந்திக்கச் சொன்னார். சந்தித்தேன்.

"நீ வேலை செய்யும் ஓட்டலில் 515—ம் நம்பர் அறையில் கிஜிமா என்பவள் தங்கியிருக்கிறாள். அவளை நீ கொன்று விட்டால் உனக்கு ஏராளமான பணம் தருகிறேன்" என்றார். நான் தயங்கினேன். "யோசிக்காதே! இவ்வளவு பணம் உனக்கு யார் கொடுப்பார்கள்? இந்தா பிடி!" என்று கூறி இதோ இந்த லாக்கரில் உள்ள பணம் அத்தனையும் என்னிடம் கொடுத்து "போய் வேலையை முடி" என்றார். அத்துடன் கொலை செய்வதற்கான சில யோசனைகளும் சொல்லித் தந்தார். அவர் யோசனைப்படி என்னுடைய இன்னொரு நண்பருக்குப் போன் செய்தேன். ஒகி ஐலண்டுக்கு வரச் சொன்னேன். அவர் தங்கிய அறையிலிருந்து அவருக்குத் தெரியாமல் இரண்டு கைக் குட்டைகளை எடுத்துக் கொண்டேன்.

விடியற்காலம் கிஜிமா அறைக கதவை நான் தட்டிய போது அவர் "யார்?" என்று கதவைத் திறக்காமலே கேட்டார்.

"நான் தான் ஓட்டல் ஸர்வெண்ட்" என்று கூறிக் கதவைத் திறக்கச் சொன்னேன். பெண்குரலாயிருந்ததால் அவள் பயமின்றித் திறந்து "என்ன வேண்டும்?" என்று கேட்டார். "டூத் பேஸ்ட் கொண்டு வந்திருக்கிறேன்" என்றேன். அவர் அதை என்னிடமிருந்து வாங்கி மேஜையின் மீது வைத்துவிட்டு, ஜன்னல் பக்கம் போய் நின்று கிழக்கே பார்த்தார். "இன்னும் சிறிது நேரத்தில் அழகான சூரியோதயக் காட்சி பார்க்கலாம். இங்கே வந்து அடிவானத்தைப் பார்" என்று என்னை அருகில் அழைத்தார்.

நான் அவர் பக்கத்தில் போய் நின்றேன். வேடிக்கை பார்ப்பது போல் பாசாங்கு செய்தேன். அவர் ஏமாந்திருந்த சமயம் பார்த்து சட்டென்று அவரைக் கீழே தள்ளிவிட்டேன். அப்போது என் கையில் எஸ். கே. எழுத்துக்கள் கொண்ட கர்ச்சிப் வைத்திருந்தேன். கிஜிமா, தான் கீழே விழாமல் தப்புவதற்காக என் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

அப்போதுதான் அந்தக் கர்ச்சிப் அவள் கையில் சிக்கியது. தற்கொலை செய்து கொள்ளப் போகிற எந்தப் பெண்ணும் கையில் கர்ச்சிப் வைத்துக் கொண்டிருக்க மாட்டாள். கிஜிமா தானாகவே கீழே விழுந்து சாகவில்லை. அவளைக் கீழே தள்ளிக் கொன்றவள் நான்தான்.

அடுத்தகணமே நான் அந்த அறையை விட்டு வெளியேறிக் கதவைச் சாத்தி விட்டேன். எனக்குப் பணம் கொடுத்துக் கொலை செய்யத் தூண்டிய அந்தப் பணக்காரர் எனக்கு உதவியாக நாலு பேரை அனுப்பியிருந்தார். அவர்கள் வெளியே காத்திருந்தார்கள். திட்டமிட்டபடி நான் வைத்திருந்த இன்னொரு கைக்குட்டையை அவர்களிடம் கொடுத்து விட்டு என்னுடைய ஸ்டோர் அறைக்கு ஓடி விட்டேன். கிஜிமா தற்கொலை செய்து கொண்டதாகவே பலர் நம்பி விட்டார்கள். யாரும் என் மீது சந்தேகப்படவில்லை. அன்று என் உதவிக்கு வந்திருந்த அந்த முரடர்கள் நாலு பேருடைய விலாசமும் இத்துடன் இணைத்திருக்கிறேன்.

கிஜிமாவைக் கொலை செய்வதற்காக எனக்குப் பணம் தந்தவர் ஒரு பெரிய தொழிலதிபர். அமெரிக்க எண்ணெய்க் கம்பெனி ஒன்றுடன் கூட்டுச் சேர்ந்திருப்பவர். ஸதுரா இயக்கத் தலைவியைத் தீர்த்துக் கட்டி, ஒகி ஐலாண்டில் எண்ணெய் எடுக்கும் முயற்சியில் அமெரிக்கக் கம்பெனிக்கு உதவி செய்ய வேண்டும் என்பதில் தீவிரமாக இருப்பவர். அதற்காகவே எனக்குப் பணம் கொடுத்து இந்தக் கொலையைச் செய்யத் தூண்டியவர். பெரும் பணம்தந்தார். என் வாழ்நாளில் நான் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத தொகை! அவர் விலாசமும் இத்துடன் வைத்திருக்கிறேன்.

பணத்துக்கு ஆசைப்பட்டு முன்யோசனை இல்லாமல் கிஜிமாவைக் கொன்று விட்டேன். பெண் புத்தி பின் புத்தி என்பது அப்புறம்தான் எனக்கு உதித்தது.

'என் மூலம் ரகசியம் வெளிப்பட்டு விடும் என்பதற்காக இவர்கள் என்னையே ஒருவேளை கொன்று விட்டால் என்ன செய்வது?' இப்படி ஒரு சந்தேகம் எழுந்தது எனக்கு.

ஒரு வேளை, அப்படி நேர்ந்துவிட்டால் இவர்களைச் சும்மா விடக்கூடாது, பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்பதற்காகவே, அந்தப் பணத்தையும் இந்தக் கடிதத்தையும் அவர்கள் விலாசத்தையும் இந்த லாக்கரில் வைத்துப் பூட்டியிருக்கிறேன். நான் கொலையுப்பட்டால் அவர்களும் மாட்டிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே இப்படிச் செய்திருக்கிறேன்.

ரியோ.

இன்ஸ்பெக்டர் கடிதத்தை கௌதமிடம் கொடுத்தார். கௌதம் அதைப் படித்து விட்டு "ஸார், இவர்களை இப்போதே கைது செய்யாவிட்டால் தப்பி விடுவார்கள். இண்டஸ்ட்ரீஸ் மினிஸ்டருக்குக் கூட இதில் பங்கு இருக்கும் என்று தோன்றுகிறது" என்று பரபரத்தான்.

# 14

டோக்கியோவின் சுறுசுறுப்பைக் குளிர் கவ்விக் கொண்டிருந்தது.

கோபால் படுக்கையில் புரண்டபடி காலை உறக்கத்தின் சுகத்தில் ஆழ்ந்திருந்தான். அயாகோ அவனைத் தட்டி எழுப்பி, "நேரமாகிறது; எழுந்திருங்க; இன்று நாம் கியோட்டோ போக வேண்டும்," என்றாள்.

"அங்கே என்ன விசேஷம்?"

"எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவருக்குத் திருமணம்....

"நம் திருமணம் எப்போது? அதைச் சொல்லு முதலில்; அப்புறம்தான் எழுந்திருப்பேன்" என்று அவளை உரிமையோடு இழுத்து அணைத்துக் கொண்டான் கோபால்.

"திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படு கின்றன என்பது உனக்குத் தெரியாதா?" என்று சிரித்து மழுப்பிய அயாகோ அவன் பிடியிலிருந்து நழுவப் பார்த்தாள்.

"உன்னை விடமாட்டேன். நீ இருக்கும் இந்த வீடுதான் எனக்கு சொர்க்கம். நம் திருமணத்தை இங்கேயே இப் போதே நிச்சயித்து விடுவோம்!" என்றான்.

"முதலில் கியோட்டோ கலியாணத்துக்குப் போய் வந்த பிறகு நம் திருமணத்தை முடிவு செய்யலாம்" என்றாள் அயாகோ.

"ஜப்பானியர் திருமணம் நான் பார்த்ததில்லை."

"இன்று பார்க்கப் போகிறீர்களே!"

"நான் கியோட்டோ கூடப் பார்த்ததில்லை. ரொம்ப அழகான நகரமாம்!"

"ஆமாம், அங்கே முன்னூறு ஷிண்ட்டோ கோயில்கள் உள்ளன. செர்ரி மரங்கள் ஏராளம்."

"புல்லெட் ரயிலில் பயணம் செய்ய டோக்கியோ ஸெண்ட்ரலுக்குப் போனார்கள். அங்கே கௌதம் காமிரா வுடன் நின்று கொண்டிருந்தான். இவர்களைக் கண்டதும் முகத்தில் ஆச்சரியம் காட்டி, "எங்கே? ரொம்ப தூரமோ!" என்றான்.

"ஆமாம்; கியோட்டோ போகிறோம். அங்கே என் நண்பரின் திருமணம்" என்றாள் அயாகோ கண் சிமிட்டிக் கொண்டு.

"நான்கூட அங்குதான் போய்க் கொண்டிருக்கிறேன், ஒரு திருமணத்துக்காக."

பிளாட்பாரத்தில் புல்லெட் புறப்படத் தயாராய் நின்றது. ஏறிக் கொண்டார்கள்.

"இன்னும் இரண்டரை மணி நேரத்தில் கியோட் டோவில் இருப்போம்" என்றான் கௌதம்.

புல்லெட் மௌனமாய் நகர்ந்து சில விநாடிகளில் சிட்டாய்ப் பறக்கத் தொடங்கியது.

"கௌதம்! ரியோவைச் சுட்ட அந்தக் கொலைகாரனிடமிருந்து அப்புறம் ஏதாவது தகவல் கிடைத்ததா?"

பாங்க் லாக்கரில், ரியோவின். கடிதம் கிடைத்த செய்தியை கௌதம் ரகசியமாகவே வைத்திருந்தான். ரியோ குறிப்பிட்ட அந்த ஆறு பேரையும் போலீஸில் பிடித்த பிறகே பத்திரிகைகளில் செய்தி வெளியாக வேண்டும். அதுவரை எந்தத் தகவலும் யாருக்கும் தெரியக் கூடாது என்பது போலீஸ் உத்தரவு. கௌதம் ராஜ விசுவாசமுள்ள பத்திரிகை நிருபன்.

"ஒரு தகவலும் தெரியவில்லை. முரடன் அவ்வளவு லேசில் சொல்லிவிடுவானு?" என்று ஒன்றும் அறியாதவன் போல் பதில் சொன்னுன் கௌதம்.

"இண்டஸ்ட்ரீஸ் மினிஸ்டரைச் சும்மா விடக் கூடாது. எனக்கென்னவோ அவருக்கும் இதில் பங்கு இருக்கிறதென்றே தோன்றுகிறது," என்ருன் கோபால்.

"புலன் விசாரணையில் பல உண்மைகள் தெரியப் போகின்றன, பார்! இன்று. நாளை நல்ல செய்தி எதிர் பார்க்கலாம். அது சரி; உன் எதிர் காலம் பற்றி ஏதாவது முடிவு செய்தாயா, கோபால்?"

"ஊருக்கே திரும்பிப் போக வேண்டியதுதான். தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்!" என்ருன் கோபால்.

"அமெரிக்காவுக்கா!"

"இல்லை. நான் 'டிப்கோ' கம்பெனிக்கும், எண்ணெய்க்கும் தலை முழுகி விட்டேன். என் ராஜிஞமாக் கடிதத்தை அனுப்பி மூன்று நாட்கள் ஆகின்றன. இப்போது நான் ஒரு சுதந்திர புருஷன்!"

"இல்லை; இன்றுமுதல்தான் நீ அடிமையாகப் போகிருய்!" என்று அயாகோவை ஜாடையாகப் பார்த்துச் சிரித்தான் கௌதம்.

"புதிர் போடுகிருயா, கௌதம்?"

"இல்லை. உனக்கு இன்று திருமணம். என் முன்னிலையில் தான் நடக்கப் போகிறது. மணப்பெண் யார் தெரியுமா

அயாகோ! அதற்குத்தான் கியோட்டோ போய்க் கொண்டிருக்கிறோம்" என்றான் கௌதம்.

கோபாலுக்கு ஒரு நிமிடம் ஒன்றும் புரியவில்லை. அயாகோவை ஒரு கேள்விக் குறியோடு பார்த்தான். "திருட்டுக் கழுதை!" என்று செல்லமாகத் தமிழில் திட்டினான்.

பிறகு, "ஓகோ! இதெல்லாம் நீங்கள் இருவரும் சேர்ந்து போட்ட ரகசிய திட்டமோ?" என்றான்.

"திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன" என்று சிரித்தாள் அயாகோ.

ரயில் கியோட்டோவில் நின்றது. மூவரும் டாக்ஸி பிடித்து அருகிலிருந்த ஷிண்ட்டோ கோயில் ஒன்றுக்குப் போனார்கள்.

கோயிலுக்கு முன்னால் இருந்த நீர் ஊற்றிலிருந்து அகப்பையால் தண்ணீர் ஏந்திக் குடித்தார்கள். அப்புறம் சந்நிதியில் போய் நின்று கோபாலும் அயாகோவும் மாலை மாற்றிக் கொண்டார்கள். கௌதம், அந்தக் காட்சியைப் படம் எடுத்துக் கொண்டான்.

"இந்த வினாடி முதல் நீ அயாகோவுக்கு அடிமை!" என்றான், கௌதம்.

கோபால் சிரித்தான்.

"இந்தக் கோயிலில் அதிர்ஷ்டச் சீட்டு விற்கிறார்கள். அதை வாங்கிப் பார்ப்போம். நம் எதிர்காலம் பற்றி அதில் எழுதியிருக்கும்" என்றாள் அயாகோ.

கோபால் அதிர்ஷ்டச் சீட்டு ஒன்று வாங்கினான். பத்து அங்குல நீளத்தில் சுருளாக இருந்த அந்தக் காகிதத்தைப் பிரித்தபோது அதில் மேலும் கீழுமாக ஜப்பான் எழுத்துக்கள் தெரிந்தன.

கௌதம் அதை வாங்கிப் படித்து விட்டு "சரியான அதிர்ஷ்டக்காரன், நீ!" என்றான்.

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

கௌதம் அந்தச் சீட்டில் எழுதியிருந்த செய்தியை கோபாலுக்குச் சொன்னான்.

"நீ காதலித்த பெண் உன்னை விரைவில் மணந்து கொள்வாள். இன்னும் ஓராண்டில் உனக்குப் பெண் குழந்தை பிறக்கும்."

அயாகோ வெட்கமாய்த் தலைகுனிந்து கொண்டாள்.

"நான் நிஜமாகவே அதிர்ஷ்டசாலிதான். ஜப்பானுடன் எண்ணெய் உறவு கொள்ளக் கனவுப்பாலம் கட்டினேன். அது கனவில் கட்டிய பாலமாகவே ஆகி விட்டது! ஆனாலும் இப்போது எண்ணெய்க்குப் பதிலாக ஒரு பெண்ணை மணந்து கொண்டு ஜப்பானுடன் உறவு தேடிக்கொண்டு விட்டேன். இது அதிர்ஷ்டம்தானே?" என்றான்.

"நெக்ஸ்ட்" என்றான்.

"ஓட்டலுக்குப் போகிறோம். விருந்து சாப்பிடுகிறோம்," என்றாள் அயாகோ.

"அப்புறம்?" என்றான் கோபால்.

"ஹனிமூன்! பயப்படாதே! உங்களோடு நான் வர மாட்டேன்" என்று குறும்பாகச் சிரித்தான் கௌதம்.

மூவரும் டைனிங் ஹாலில் விருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது டி.வி. யில் செய்தி படித்தார்கள்.

"கிஜிமா கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட ஆறு பேரும் கைது!

பாங்க் லாக்கரில் கிடைத்த ரியோவின் கடிதம்.

இண்டஸ்ட்ரீஸ் மினிஸ்டர் ராஜினாமா!"

"குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதில் ஒத்துழைப்புதந்த யமூரிலாண்ட் நிருபர் கௌதமைப் பாராட்டும் வகையில் போலீஸ் இலாகா ஒரு பெரும் தொகையைப் பரிசாக அளிக்கிறது!"

"கௌதம்! கங்ராஜுலேஷன்ஸ்! கடைசிவரை என்னிடம் எதையுமே சொல்லவில்லையே நீ! பெரிய அதிர்ஷ்டக்காரன் நீதான்! இன்னொரு ஐஸ்கிரீம் சாப்பிடுகிறாயா?" என்று கேட்டான் கோபால்.

அயாகோ பேசாமல் நின்றாள். இன்ப அதிர்ச்சியால் தாக்கப்பட்டு, உணர்ச்சி வசமாயிருந்தாள்.

முற்றும்.



ஆசிரியர் சாவிக்கு அறிமுகம் தேவையில்லை. பேராசிரியர் கல்கியின் கீழ் 1938–ல் ஆனந்த விகடனில் தம்முடைய பத்திரிகை உலகப் பயணத்தைத் தொடங்கியவர்.

பின்னர் 'கல்கி' பத்திரிகை துவங்கப்பட்ட போது பேராசிரியர் அழைப்புக்கு இணங்கி அந்தப் பத்திரிகையில் சேர்ந்து பணியாற்றினர்.

பத்தாண்டுகள் கழித்துத் திரும்பவும் இரண்டாம் முறையாக ஆனந்த விகடனில் பணி. அப்போதுதான் அவருடைய புகழ் பெற்ற 'வாஷிங்டனில் திருமணம்' வெளியாகிப் பெரும் பரபரப்பு ஏற்படுத்தியது.

பின்னர் 1967-ல் 'தினமணி கதிர்' ஆசிரியராகப் பொறுப்பேற்ற போது அந்தப் பத்திரிகையில் அவர் அறிமுகப் படுத்திய புதுமை அனைவரது பாராட்டையும் பெற்றதோடு, அப் பத்திரிகையின் விற்பனையும் 1,30,000 பிரதிகளை எட்டியது.

பின்னர் அவரது நெருங்கிய நண்பர் கலைஞர் கருணாநிதியின் அழைப்புக்கிணங்க 'குங்குமம்' வார இதழைத் தொடங்கினர். குறுகிய காலத்திலேயே அதன் விற்பனை 1,60,000 பிரதிகளை எட்டியது.

அவர் தம்முடைய சொந்தப் பத்திரிகை 'சாவி'யைத் தொடங்கியது 1979-ல்.

இன்றைய பிரபல எழுத்தாளர்களில் பெரும்பாலோர் ஆசிரியர் சாவியால் அறிமுகப்படுத்தப் பட்டவர்கள். இன்னும் சிலர் அவரால் பிரபலம் அடைந்தவர்கள்.

உலகம் முழுதும் பலமுறை சுற்றி வந்துள்ள இவரது பயணக் கட்டுரைகள் வாசகர்களால் மிகவும் விரும்பி வரவேற்கப் பட்டவை.

நகைச்சுவை இவருக்குக் கைவந்த கலை. வாஷிங்டனில் திருமணமே அதற்கு நிலையான சான்று. காரக்டர், இங்கே போயிருக்கிறீர்களா?, ஊரார், நவகாளி யாத்திரை, விசிறி வாழை, வழிப்போக்கன், பழைய கணக்கு இவ்வளவும் இவர் எழுதிய நூல்கள்.